ஸ்ரீ:

# உத்தம புத்திரர்கள்

19 FEB 1931

P. B. ஸ்ரீநிவாஸாசார்யர், B.A.,

அவர்கள் இயற்றியது.

அம்பிகா பிரதர்ஸ்,

மயிலாப்பூர் : : மதராஸ்.

Copyright.] [விலை அணா 4.

175451
-600 008.

THE B.N. PRESS
1922
PRINTERS MADRAS.

# விஷய சூசிகை


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | கஸபியான்கா | 1 |
| 2. | பூரு | 4 |
| 3. | ஸெபாஸ்டியன் | 9 |
| 4. | பீஷ்மன் | 16 |
| 5. | கருடன் | 23 |
| 6. | அனப்பியஸும் ஆம்பிநோமஸும் | 26 |
| 7. | சூரபதுமன் மகன் இரணியன் | 29 |
| 8. | ஸி. வி. அரங்கநாத சாஸ்திரி | 31 |
| 9. | தருமாங்கதன் | 34 |
| 10. | நாபாகன் | 44 |
| 11. | ஸாமுவெல் ஜான்ஸன் | 49 |
| 12. | புண்டரீகன் | 52 |
| 13. | கௌசிகன் | 60 |
| 14. | குவின்டஸ் ஃபிஸ்ரோஸின் குமாரன் | 67 |



கஸபியான்கா.

# உத்தம புத்திரர்கள்.

## 1. கஸபியான்கா.

பதினெட்டாம் நூற்றுண்டின் கடைசியில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் கொடிய பகை ஏற்பட்டுப் போர் நிகழ்ந்து வந்தது. அப்போரினிடையே ஒரு சமயம் ஆங்கிலேயருடைய கப்பற்படையும்பிரெஞ்சுக்காரருடைய கப்பற்படையும் மத்தியதரைக் கடலின் கிழக்குப் பாகத்தில் நைல் நதி சங்கம மாகு மிடத்தில் கைகலந்தன. இச்சம்பவத்தில்ஆங்கிலேயரே வெற்றிபெற்றனர்; ஆயினும் அந்த வெற்றியானது எளிதிலே கிடைத்துவிடவில்லை. பிரெஞ்சுக்காரர் அதிக தைரியத்தோடும்திறமையோடும் சண்டைசெய்தும் துரதிர்ஷ்டவசமாகத்தோல்வியுற்ருர்கள். இரண்டு பக்கத்தாருடைய கலங்களிலிருந்தும் பிரயோகிக்கப்பட்ட பீரங்கி வெடிகளாலும் பிறவற்ருலும் எண்ணிறந்த வீரர்கள் உயிர் துறந்தார்கள்.

பிரெஞ்சுக்காரர்களுடைய கப்பல்களில் 'ஓரியண்ட்' என்பது ஒன்று. இதனைச் செலுத்திய தலைவர் கஸபியான்கா என்ற வீர மாலுமி. கஸபியான்கா வீரம் முதலிய தன்மைகளில் இதர தலைவர்களுக்குச்சிறிதும்பின்வாங்கினவரல்ல.இவருக்குக்

கஸபியான்கா என்ற பெயரையே உடைய புத்திர னொருவன் இருந்தான். இவன் பதின்மூன்று வயதும் நிரம்பாத பாலகனாயினும் அருங்குணங் கள் பலவற்றிலும் தந்தையை விஞ்சியவன். தந்தையின் கட்டளை ஏதாயினும் அதனைத் தவறாது நிறைவேற்றுவதான உத்தம குணம் இவனிடம் பொருந்தி யிருந்தது.

சண்டை ஆரம்பிக்கும் சமயத்தில் 'ஓரியண் டின்' தலைவரான கஸபியான்கா தம் புத்திரனைக் கப்பலில் ஒரு புறத்தில் தங்கியிருக்க வைத்து ஒரு சிறிய வேலையைச் செய்யும்படி கட்டளை யிட்டார். சிறிய பையனாகையால் அசாக்கிரதையினால் திரி வானானால் அவனுக்குப் பிராணாபத்து நேர்ந்து விடப் போகிறதே என்ற கவலையினால் அவர் அவனை அவ்வாறு இருக்கச் செய்து, எந்தக் கார-ணத்தை முன்னிட்டும் அவன் தம் உத்தரவில்லா-மல் இடம் விட்டுப் பெயர்ந்து போகக் கூடாது என்று கூறிவிட்டுத் தம் கடமையைச் செலுத்தச் சென்றார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் ஆங்கிலேய ருடைய கப்பல்களில் ஒன்றிலிருந்து தீர்க்கப்பட்ட ஒரு குண்டு 'ஓரியண்டில்' தாக்கி அதைத் தீக்கிரை-யாக்கியது. அபாயத்துக்கு அஞ்சிய பிரெஞ்சு மாலுமிகள் எவ்விதமேனும் உயிர் தப்பினால் போதும் என்று கருதிப் படகுளில் இறங்கிப்

போகலானார்கள். அவர்கள், பாலகனான கஸபி-யான்காவைத் தம்முடன் வரும்படி அழைக்க, அவன் தன் தந்தையின் கட்டளையின்றி வர முடி-யாது எனமறுத்து விட்டான். அத் தந்தையோ, பகைவர் தீர்த்தவெடியால் உயிர் துறந்திருந்ததை ஒருவரும் அறியவில்லை; கஸபியான்காவுக்கும் அவ்விஷயம்தெரியாது. மற்ற மாலுமிகள் அவ் விடம் விட்டு அகன்றார்கள்.

தன் கதி அபாயமான நிலைமையி லிருப்பதைக் கண்டு கஸபியான்கா தந்தையைப் பலமுறை கூவி அழைத்து, 'என் வேலை தீர்ந்து விட்டதோ?' என்று கேட்டான். பதிலொன்றும் வரவில்லை; தீயோ நெருங்கி வந்து விட்டது. 'அப்பா, நான் போகலாமா?' என்று மனமுளையக் கேட்டான் அச் சிறுவன். இதற்குள் நெருப்பு அவனுடைய உடையிற் பற்றிக் கொண்டது. தீயின் கொடுமை யைப் பொறுக்க முடியாமல் பாலகன், 'தந்தாய்! இப்போதாகிலும் நான் போகலாமோ? உத்தரவு என்னவோ?' என்று அலறிக்கூவினான். ஆயினு மென்! பிரதியுத்தரம் ஏதும் வரவில்லை. தீயோ உடலிற் பற்றித் தலை மயிரையும் பொசுக்கத் தொடங்கியது. அப்போதும் கஸபியான்கா அவ் விடத்தைவிட்டகலாமல் தான் அங்கிருக்கவேண்டு மென்பதே தந்தைக்கு இஷ்டமென்று நினைத்து மரணாவஸ்தையுடன் துடி துடித்து நின்று,

'பிதாவே, நான் இங்கிருந்தே தீரவேண்டுமோ?' என்று கடைசிமுறையாகக் கதறினுன். உயிர் நீத்த தந்தை உத்தரம் தருவதெப்படி?

இச்சமயம், கப்பற்றளத்தில் பற்றியிருந்த நெருப்பு, வெடிமருந்து சேகரித்துவைக்கப்பட்டுள்ள அறையிலே புகுந்ததுதான் தாமதம், இடி விழுந்தது போன்ற சப்தத்தோடு கப்பல் பதினுயிரம் சுக்கலாக உடைந்து சிதறிப் போயிற்று. பால் மணமருத பாலகனுன கஸபியான்கா எங்கோ தூக்கி எறியப் பட்டான்.

தந்தை எதற்காகத் தனக்கு அவ்வித உத்தர விட்டார் என்பதை அறிய அவன் முந்தவில்லே; உயிரும் ஒரு பொருட்டாக அவனுக்குத் தோற்ற வில்லே; பிதுர்வாக்கிய பரிபாலனமே பரம தருமமாக அவனுக்கு விளங்கியது. இவனன்றே சற்புத்திரன்!

---

## 2. பூரு.

முற்காலத்தில் சந்திர வமிசத்தில் நகுஷன் என்ற கீர்த்தி வாய்ந்த சக்கரவர்த்தி ஒருவர் இருந்தார். அவருக்குப் பல சிறந்த புத்திரர்கள் இருந்தனர். அவர்களுள் யயாதி என்பவர் ஒருவர்.

யயாதி, அசுரர்களின் குலகுருவான சுக்கிராசாரியருடைய மகளான தெய்வயானேயையும்,

அசுர சக்கரவர்த்தியான விருஷ பருவனுடைய மகளான சர்மிஷ்டையையும் மணம் புரிந்து கொண்டார்.

இவர்களிரண்டு பேரையும் கலியாணம் செய்து கொள்வதற்குமுன், சர்மிஷ்டை தெய்வயானைக்கு ஒரு கொடிய தீங்கு இழைத்திருந்தாள். அதனை மனத்தில் கொண்ட சுக்கிராசாரியர் மிகவுங்கோபம் கொண்டு யயாதியைப்பார்த்து, 'தெய்வயானையைப் போலவே சகல சௌகரியங்களிலும் சர்மிஷ்டை சமமான உரிமை உடையவளாயிருக்கட்டும்; ஆயினும் நீ ஒருபோதும் அவளைத் தீண்டக் கூடாது; தீண்டினால் கேடுறுவாய்' என்று கடுமையாகக் கூறியிருந்தார். இந்த நிபந்தனைக்கு உட்பட்டே யயாதி சர்மிஷ்டையை மணந்து கொண்டார்.

அசுர குருவின் கட்டளை பயனற்றதாகப் போகும்படி விரைவில் நேரிட்டது. திருமணம்முடிந்த இரண்டு வருஷங்களுக்கெல்லாம் யயாதி சர்மிஷ்டையினிடமாகச் சகல உத்தம குணங்களும் பொருந்தியவனான பூரு என்ற புத்திரனைப் பெற்றார். அதன் பின்பு, சர்மிஷ்டையின் வயிற்றில் இன்னும் இரண்டு புத்திரர்கள் பிறந்தனர். தெய்வயானைக்கும் யது, துர்வசு என்ற இரண்டு மக்கள் உதித்தார்கள்.

காலக்கிரமத்தில் தெய்வயானை தன் சக்களத்தியிடம் பொறாமை கொண்டாள்; தன் தந்தையின்

கட்டளையை மீறித் தன்னைப் புறக்கணித்து யயாதி அவள்பால் அன்பு பாராட்டியதை நினைத்து மனம் நொந்தாள். ஆகவே அவள் தன் தந்தையைக் கண்டு, நடந்தன எல்லாவற்றையும் கூற அவர் மிகவும் கோபித்து யயாதியினிடஞ் சென்று, 'யயாதீ, என் கட்டளையை மீறும்படியும் என்மகளை அவமதிக்கும்படியும் நேருவதற்கு உன்னுடைய யௌவன கர்வமே காரணமாதலால் நீ உடனே முதுமையை அடையக்கடவாய்,' என்று சாபம் தந்தார். யயாதி அக்கணமே உடல் திரங்கித் தலைமயிர் நரைத்து வலிமையிழந்து விருத்தாப்பியரானார்.

அப்போது யயாதி மனம் வருந்தித் தாம் செய்த பிழையைப் பொறுத்து அருள் புரியும்படி மிகவும் பிரார்த்தித்தார். அசுர குரு தம் மகளின் நலத்தைக் கருதியும், அவரிடம் பரிதாபப் பட்டும், அவரை நோக்கி, 'அரச ! உனக்கு இம் முதுமை இருந்தே தீரும். நான் தந்த சாபத்தை மாற்றுதல் கூடாத காரியம்; ஆயினும் இந்தக் கிழத்தனத்தை ஒரு வாலிபனுக்குக் கொடுத்து, அவனுடைய யௌவனத்தை நீ ஏற்றுக் கொள்ளும்படியான சக்தியை உனக்குத் தருகிறேன். ஆகையால் உன்னுடைய மக்களில் எவனுக்கேனும் உன்னுடைய விருத்தாப்பியத்தைத் தந்து யௌவன தசையை அவனிடமிருந்து பெற்றுக்கொண்டு பின்பு அப்படிப்பட்ட உத்தமனுக்கே உன் அரசைக் கொடு," என்று சொல்லி விட்டுப் போனார்.

அதன் பின்பு, யயாதி, தம்முடைய ஐந்து புதல்வர்களையும்கூப்பிட்டு, தம்முடைய கஷ்டமான நிலைமையைப்பற்றிக் கூறி, 'குழந்தைகளே! ஆலமரம் அடியறுகின்ற காலத்தில் அதனைத் தாங்கி நின்று உறுதி தருகின்ற விழுதைப்போன்றவர்களே உத்தம புத்திரர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் இப்போது படுகின்ற கஷ்டத்தையும் காண்கிறீர்கள். ஆதலினால், அருமை மைந்தர்களே! எனக்குயௌவனபருவத்தைத்தந்து என் முதுமையைப் பெற்றுக்கொண்டு ஆதரவு தர உங்களில் யாருக்கு விருப்பமிருக்கின்றது?' எனக் கேட்டார்.

பிள்ளைகளில் நால்வர் அவரை நோக்கி, 'தந்தாய், நீங்கள் கேட்பது மிகவும் விந்தையாக இருக்கின்றது. ஆயுள் காலத்தில் சிறந்தது இளமைப் பருவமே. அவ்விளமை கழிந்தால் திரும்பவும் வருவதுண்டோ? சுகானுபவத்திற்குரிய இளமைப்பருவத்தைத் தர எப்படிப்பட்ட மூடனும் சம்மதிப்பானோ? ஒருபோதும் இல்லை; ஆகையினால் உங்களுடைய இஷ்டப்படி நாங்கள் நடக்க இயலாது,' என்று கூறினர். கடைசியில், யயாதி, மிக்க விசனத்துடன் தம் உத்தம குமாரனை பூருவை நோக்கினர்.

அப்போது பூரு, 'எந்தாய்! ஆயுள் விரைவில் கழியும். உடல் அழிவுறும். இவ்வுடம்பெடுத்ததன்

பயன் பரோபகாரம் செய்வதனுல் அன்ரூ சித்தியாகும்; கடமைகளேச் சிறிதும் தவருது இயற்றலன்ரூ மேலானது! பெற்ரூர் சொல்லே நிறைவேற்றலன்ரூ சற்புத்திரர்க்குரிய கடமை! ஆதலால், தந்தையே, தங்களுடைய முதுமையை ஏற்றுக்கொண்டு என் வாலிபத்தைத்தர எனக்கு முழுச் சம்மதமே,' என்றுகூறி, யயாதியை வணங்கி நின்ருன்.

யயாதி அளவு கடந்த மகிழ்ச்சி யடைந்து அவ்வாறே வாலிபதசை யேற்றுத் தம் மகனேக் கட்டித் தழுவி ஆசீர்வதித்தார். பின்பு சிலகாலம் அவர் தம்மனேவியரோடு கூடிக் களிப்புடன் இல்வாழ்க்கையை நடத்தி அதன் பின்பு தவத்தில் நாட்ட முற்ற மனத்தையுடையவராஞர். ஆகவே அவர், தம்வாக்கியத்தைப் பரிபாலித்த அருமை மைந்தனுன பூருவை அழைத்து அவனிட-மிருந்து தம் முதுமையைத் திரும்பவும் பெற்றுக் கொண்டு, அவனுடைய வாலிப தசையையளித்து அவனுக்கே பட்டஞ் சூட்டினர். தந்தை சொற் கடவாது அருஞ் செயலேப் புரிந்த பூரு, உலகத்-தவரும் தேவர்களும் புகழ, நீடூழி காலம் அரசு புரிந்து சுகமாக வாழ்ந்து வந்தான்.

## 3. ஸெபாஸ்டியன்.

ஐரோப்பாக் கண்டத்தில், ஸ்பெயின் தேசத்தில், ஸெவில்நகரத்தில், ‘மியுரில்லோ’ என்ற பெயர் பெற்ற சித்திரிகர் ஒருவர் இருந்தார். அவருடைய காலத்தில் செல்வர்கள் மனிதர்களை அடிமைகளாக விலைக்கு வாங்கிக்கொள்வதுண்டு. அவ்வடிமைகளை எசமானர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். மிருகங்களைக் காட்டிலும் தாழ்மையாக அடிமைகள் நடத்தப்படுவதுண்டு. சில சந்தர்ப்பங்களில் அடிமைகளின் உயிரை வாங்கிவிடும்படிக்கும் அக்காலத்திய கொடிய சட்டம் இடம் கொடுத்திருந்தது. மியுரில்லோவினிடத்தில் இவ்வாறான அடிமைகள் தந்தையும் மகனுமாக இருவர் இருந்தனர். மகனுக்கு ஸெபாஸ்டியன் என்று பெயர். மியுரில்லோ ஸெபாஸ்டி-யனைத் தம் சித்திர சாலையில் வேலைக்காரனாக அமர்த்தி யிருந்தார்.

அச் சித்திரிகரிடம் பல மாணவர்கள் வந்து சித்திரிகத் தொழிலைக் கற்று வந்தனர். அவர்கள் அனைவரும் அடிக்கடி சித்திர சாலையில் உள்ள திரைச்சீலைகளில் அரை குறையாகச் செய்யப்பட்ட அழகிய படங்களைப் பார்க்க நேருவதுண்டு. அப்படங்கள் எப்போது எழுதப்பட்டன என்பதும் எவருடைய கைத்திறமையின் பயன் என்பதும் ஒருவராலும் தெரிந்து கொள்ளக்கூடவில்லை.

வழக்கம் போல மாணவர்கள் ஒருநாள் காலையில் சித்திராலயத்துக்கு வந்து பார்க்கும்போது, கிறிஸ்தவர்களால் ஜகத்ரக்ஷகராகப் பாவிக்கப் படும் இயேசுவினுடைய மாதாவாகிய மேரியம்மை யின் திருவுருவமொன்று திரைச் சீலையில் அரை குறையாக முடிக்கப் பட்டு இருந்ததைக் கண்டு பெரிதும் வியந்திருந்தனர். அச்சமயத்திலேயே சித்திரிகாசிரியரும் அவ்வறையில் நுழைந்து அத-ளைக் கண்டார். அளவிறந்த ஆச்சரியமும் ஆநந்த-மும் அவர் மனத்திற் குடிகொண்டன. தம்மை அறி-யாமலே அவர் அச்சித்திரத்தின் சீர்மையை வாயாரப் புகழ்ந்தார். பின்பு அவர் அந்தப்படத்தை வரைந்தவர் யாவர் என்று அறிய எண்ணங் கொண்டு தம் மாணவர்களில் ஒவ்வொருவரையும் அதைப் பற்றிக் கேட்டார். தங்களில் எவருமே அதைஎழுதாததனுல் ஒருவரும் முன்வரத் துணிய வில்லை.

திரும்பவும் மியுரில்லோ அவர்களைப் பார்த்து 'பிள்ளைகளே! கூச்சப்பட வேண்டியதில்லை. மெய் யாகவே இப்படத்தைச் சித்திரித்தவன் மிகக் கை தேர்ந்தவன். சிறிது காலத்திற்குள் அச் சித்திரிகன் என்னிலும் சிறந்த புகழை அடைவான் என்று நான் கருதுகிறேன். இதை வரைந்தவன் யாவன் என்று இப்போதேனும் கூறுங்கள்,' என்று கூறினுர். அப்போதும் ஒரு பதிலும் வரவில்லை.

உண்மையைக் கூற அவர்கள் அஞ்சுகிருர்கள் என்று நினைத்து அவர் அவர்களுடைய தைரிய மின்மைக்காகப் பலவாறு இகழ்ந்து, பின்பு ஸெபாஸ்டியனைப் பார்த்து, 'ஸெபாஸ்டியன்! இவ்விடத்தில் நேற்றிராத்திரி எந்த மாணவன் வந்தான்? நீ அறிவாயா?,' என்று அதட்டி வினவினர். அடிமைச் சிறுவன் நடுங்கி நின்று, 'எஜமானே! நேற்று இரவு இம் மாணுக்கர்களில் யாருமே இங்கு வரவில்லை' என்ருன். மியுரில்லோ கொஞ்ச நேரம் சிந்தித்திருந்து பின்பு, 'சரிதான்! இன்றிரவு நீ விழிப்போடு கவனித்திருந்து இங்குவந்து போகிறவனைக் கண்டு பிடிக்க வேண்டும். தெரிவிக்கா விட்டால் உன் முதுகுத்தோல் உரிந்து விடும். சாக்கிரதை" என்று அதட்டிக் கூறித் தம் அலுவலைக் கவனிக்கப் போயினர்.

அன்றிரவு ஸெபாஸ்டியன் வழக்கம்போலவே சித்திரசாலையில் திரைச் சீலையினருகே படுத்துக் கொண்டான். அன்று பகல் முழுவதும் அவன் சிரமமான வேலையைச் செய்து களைத்திருந்ததனுல் விரைவில் கண்ணயர்ந்து வெகு நேரம் மெய்ம்மறந்து தூங்கினுன். மணி மூன்றடித்ததும் அவன் திடுக்கிட்டு எழுந்து அந்நேரம் வரையில் தூங்கி விட்டதற்காகத் தன்னையே நொந்து கொண்டான். பின்பு அவன், 'மணி மூன்றுதான் ஆயினும் என்ன! இன்னும் பொழுது விடிய

மூன்று மணிநேரம் உள்ளது. அதற்குள் ஏதா வது செய்வேன்!' என்று நினைத்து, வர்ணங் களைத் தயாரித்துத் தூரிகையை எடுத்துக் கொண்டு தான் முந்திப் பூர்த்தி செய்யாமல் விட்டிருந்த சித்திரத்தின் அருகில் சென்றான். அதனை அழித்து விட்டு வேறொன்றைத் தொடங்குவ தென்று அவன் உத்தேசித்தான். ஆயினும் அழிக்க முன் வந்த கையோ பின்னுக் கிழுக்கலா-யிற்று; மனமும் வரவில்லை. ஆகவே அவன், 'சரி, இதை நாம் பூர்த்தியாகச் செய்த பிறகு அழித்து விடுவோம்,' என்றெண்ணிப் பூர்த்தியாகாத இடங்-களைப் பூர்த்தி செய்து கொண்டும், பூர்த்தியான பாகங்களைக் கண்டு வியந்து அழகு படுத்திக் கொண்டும் அதே கருத்தாக இருந்து வேலைசெய்ய-லானான்.

அவனுக்குக் காலங் கழிந்ததே தெரிய வில்லை; விடிந்து வெகுநேரமாகியும் தீபம் எரிந்து பிரகாசமாக விளங்கிக் கொண்டிருந்தது. சித்திர மும் ஸெபாஸ்டியனுடைய மனத்துக்குத் திருப்தி யாகவே விளங்கி முடிவு பெற்றது. அவன் பக்தி விநயங்களோடு நின்று ஆநந்தித்து வியந்த பின்பு அதை அழித்து விடுவதே சரியென்று துணிந்து அருகே துணியொன்றைக் கொண்டு கையை நீட்டினான். நீட்டினது தான் தாமதம், அது தன்னிலும் வலிமையுள்ள ஒரு கரத்தால்

இறுகப் பிடித்து இழுக்கப்பட்டது. உடனே ஸெபாஸ்டியன் அச்சங் கொண்டு திரும்பிப் பார்க்க, வழக்கம் போலச் சரியான நேரத்திற்குச் சித்திரம் பயிலச் சாலைக்கு வந்து இவனுடைய கைத்திறத்தை வியந்து நின்று பார்த்துக்கொண்டு இருக்கும் மாணவர்களையும், ஆநந்தத்தில் மூழ்கித் தன் கையை இறுகப் பிடித்துக் கொண்டிருக்கும் மியுரில்லோவையும் கண்டு அச்சமும் திகிலும் கொண்டு நடுங்கினான். எஜமானனுடைய உத்தர-வின்றி அவருடைய சாலையில் வேலைசெய்ய அடி-மையான தனக்கு எவ்வித உரிமையும் இல்லை ஆகையால் அவர் தன்னை என்னசெய்வாரோ என்ற ஏக்கம் அவனைப் பிடித்தலைத்தது. முன்னமேயும் அவன் உண்மையைக் கூறியிருக்கவில்லை. ஆத-லால் இன்னது சொல்வது இன்னது செய்வது என்று அறியாமல் விழித்தான்.

மியுரில்லோ, 'ஸெபாஸ்டியன், உன்னுடைய ஆசிரியர் யாவர்?' என, அடிமைச் சிறுவன், 'ஐய, தாங்களே அடியேனுடைய உத்தம ஆசிரியர்; தங்களுடையமாணவர்களுக்குக் கற்பிப்பதையெல்-லாம் கவனத்தோடு கேட்டும் கண்டும் அறிந்து, அறிந்ததை நன்கு சிந்தித்து, சிந்தித்ததை இரவு நேரங்களில் ஒருவரும் அறியாதபடி பயின்று வந்தேன். இந்தப் பெரும் பிழையைத் தாங்கள் மன்னிக்கவேண்டும். அறியாமல் நான் இம்மாதிரி

'செய்துவிட்டேன், இனிச் செய்ய மாட்டேன்,' என்று வாய் குழறிக் கூறி அவர் காலில் விழுந்து வணங்கினான்.

சித்திரிகாசிரியர் புன்னகையோடு அவனை எழுப்பி, 'ஸெபாஸ்டியன், வாஸ்தவமாகவே நீ இவர்களெல்லாரையும் விடச்சாமர்த்திய சாலியே. விரைவில் நீ மிகச் சிறந்த தொழிலாளியாவாய்,' என்று கூறி, மாணவர்களை நோக்கி, 'பிள்ளைகளே, இவனுக்குத்தரவேண்டியதுஎன்ன? தண்டனையா, வெகுமதியா?' என்று கேட்டார். பிள்ளைகள் அனை-வரும் அவருடைய குறிப்பை அறிந்து கொண்டு ஒரே மனதாக வெகுமதியே தரவேண்டுமென, அவர் அடிமைச் சிறுவனுக்கு என்ன வேண்டு-மானாலும் தருவதாகக் கூறினார். 'துணி மணிகளைக் கேட்டுப் பெற்றுக்கொள்', எனச் சிலரும், 'பணம் வேண்டுமெனக் கேள்,' எனச்சிலரும், 'அடிமைத் தனத்தை நீக்கும்படி கேள்,' எனச் சிலருமாக இப்படிப் பலவிதமாகப் பிள்ளைகள் ஸெபாஸ்டிய-னுக்கு இரகசியமாக உரைத்தனர். ஸெபாஸ்டியன் மிகவும் மயங்கி நின்றிருந்தான். அவனுக்கு இன்னது கேட்பதென்று விளங்கவில்லை. மியுரில்லோ திரும்பவும் அவனைப்பார்த்து, 'பிள் ளாய், மயங்காதே. உனக்கு எதுவேண்டு மாயி-னுங்கேள். தவறாது கொடுக்கிறேன்,' என்று உறுதி யாகக் கூற அடிமைச்சிறுவன் அவர் பாதங்களில்

விழுந்து, மெய்பதற நாத்தழுதழுத்துக்குழற மெல்லிய குரலோடும் அச்சத்தோடும், 'கருணைமிகுந்த யஜமானரே, வயோதிகரான என்தந்தையின் அடிமைத்தனம் நீங்க அருள்புரிய வேண்டும்,' என்று பிரார்த்தித்தான்.

சாதாரணமாக ஒரு அடிமையை விடுவிப்பதென்றால் அது சாமானியமான விஷயமல்ல. எஜமானர்கள் கடின சித்தமே உடையவர்களாக இருப்பார்கள். ஆயினும்மியுரில்லோ,ஸெபாஸ்டியனுடைய கைத்திறத்தாலும் நிகரற்ற பிதுர்ப்பக்தியாலும் மனமிளகியவராகி, 'சிறுவ, உன் குணமே குணம். நான் சொன்னசொல்லைத் தவறமாட்டேன். இன்று முதல் உன்தந்தை என் அடிமையல்ல. அம்மட்டுமா? இன்று முதல் நீயும் என் அடிமையல்ல, நீங்களிருவரும் என்னைப் போலவே சர்வ சுதந்திரமும் உடையவர்கள். உன் போன்ற மாணவனை அறியாமலேபெற்ற என் போன்ற அதிர்ஷ்டவான் யாருமில்லை. ஸெபாஸ்டியன், இனி நீயே என் மகன்,' என்று கூறி அன்று முதல் அவனுக்குக் கல்வி கற்பித்து அவனைச் சீரும் சிறப்பும் உடையவன் ஆக்கினர். அவன் மியுரில்லோவைக் காட்டிலும் நற்புகழ் பெற்றுவிளங்கி அவருடைய பெயரை முன்னுக்குக் கொண்டு வந்தான். இவனுடைய நல்லறிவும் கைத்திறமும் சீரிய பிதுர்ப்பக்தியும் எவ்வளவு மேன்மையுடையன!

## 4. பீஷ்மன்.

முற்காலத்தில் சந்திர வமிசத்தில் சந்தனு என்ற சிறந்த சக்கரவர்த்தி ஒருவர் இருந்தார். அவர்வேட்டையாடஎண்ணிக் காட்டுக்குச் சென்று கங்காநதிக் கரையில் அந்நதியின் அதிதேவதை யான கங்கா தேவியைக்கண்டு காதல் கொண்டு, தம்மை மணம் புரிந்து கொள்ளும்படி அவளை வேண்டினர். கங்காதேவி, 'மகா ராஜாவே, நான் உம்மைக் கலியாணம் செய்து கொள்வதற்கு ஆக்ஷேபனையில்லை. ஆனல் ஒரு விதத்தில் நான் செய்யும் காரியங்களினுல் நமது மணவாழ்க்கைக்குப் பங்கமுண்டாகுமே, அதற்கென்ன செய்வது?' என்றாள்.

சந்தனு மகாராஜா, 'தேவி, நீ எப்படிப் பட்ட நிபந்தனை கூறினுலும் அதற்கிணங்கி நடப் பேன். இது சத்தியம். நீமட்டும் என்னைக் கலியாணம் செய்துகொண்டாற் போதும்,' என்றார். கங்கை, 'மகா ராஜாவே! என் வயிற்றில் உதிக்கும் பிள்ளைகள் விஷயமாக நான் எப்படிப் பட்ட கொடிய காரியங்களைச் செய்தாலும் நீர் அவற்றைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட செய்கைகளில் என்னைத் தடுத்தலாகாது. இவ்வாறன்றி எப்போதாவது தடுப்பீராஞல், அக்கணமே நான் உம்மை விட்டு விலகுவேன். இதற்கு நீர் உடன்பட்டால் நான் உம்முடைய வாழ்க்கைத்

துணைவியாவேன்,' என்று கூறினாள். மகாராஜா வும் அதற்கு ஒப்புக்கொள்ளத் திருமணம் இனிது முற்றியது.

கங்காதேவிக்குக் காலக் கிரமத்தில் ஒருவர் பின் ஒருவராக எட்டுப்பிள்ளைகள் தோன்றினார்கள். இவர்கள் எட்டுப்பேரும் முந்தினஜன்மத்தில் வஸுக்கள் என்ற தேவர்கள்; ஒரு சாபம் பற்றி அவர்கள் பூமியிற் பிறக்கும்படி ஆயிற்று; கங்கா தேவி அத்தேவர்களிடம் இரக்கம் பாராட்டி அவர்களைப் பாவிகளான மானிடர்கள் வயிற்றிற் பிறக்கும்படி விடாமல் தானே பெற்று, விரைவிலே அவர்கள் உலகை விட்டு நீங்கிச் சுவர்க்கம்புகும்படி செய்வதாக வாக்களித்திருந்தாள். ஆகவே அதன் படி அத்தேவி முதல் ஏழுபிள்ளைகளில் ஒவ்வொரு வரையும் பிறந்தவுடனே கொண்டுபோய்க் கங்கை யாற்றில் எறிந்து விட்டாள். சந்தனு மகா ராஜா இப்படிப் பட்ட செய்கையை எதிர் பார்க்கவே இல்லை. அதனால் எட்டாவதாகக் குழந்தை பிறந்த போது அதைக் கங்கைக்குத் தூக்கிச்செல்லமுயன்ற அவளை அவர் தடுத்து, 'ஆருயிர் போன்றவளே! இதைச்செய்யாதே. இதுவரை நாம் ஏழுகுழந்தை-களை இழந்தோம். இஃதொன்றையாயினும் உயிர் தரித்திருக்கவிடு. செய்த சிசுஹத்தி ஒரு புறமும் புத்திர வாஞ்சை ஒரு புறமுமாக என்னைப் பாதிக்கின்றன. அன்பே, இப்பிழையை மட்டும்

பொறுத்துக்கொள்,' என்று வேண்ட, கங்காதேவி ஒரே பிடிவாதமாக, 'மகா ராஜாவே, உங்களுடைய வாக்கினின்றும் நீங்கள் தவறினீர்கள். ஆகையால் இனி ஒரு கணப்போதும் உங்களோடு இருக்க மாட்டேன். ஆனால் நீங்கள் சொன்ன சொல்லை நான் கடவேன். அதன்படி இப்பிள்ளையை நான் கொல்லாமல் பலவிதக் கலைகளையும் கற்பித்து எவ்-விதத்திலும் சிறந்தவனாக்கி உம்மிடம் உரியகாலத்-தில் ஒப்புவிக்கிறேன்,' என்று கூறிக் குழந்தை யோடு மறைந்து போனாள்.

பின்பு கங்கா தேவி அக்குமாரனுக்குத் தேவ விரதர் என்று பெயரிட்டு, வஸிஷ்டர் முதலிய ஞானிகளைக்கொண்டு பலவகையான வேதசாஸ்தி-ராதி நூல்களையும், பரசுராமர் முதலிய பெரியோ ரைக் கொண்டு அஸ்திர சஸ்திர வித்தைகளையும் ஐயம் திரிபு அறக் கற்பித்துப் பயிற்றுவித்துப் பதி-னாறு வயதிற்குள் எல்லா நற்குணங்களும் திறமை-களும் அறிவும் வாய்ந்தவராக ஆக்கினாள். அக் காலத்தில் எப்போதும் கங்கா தேவியின் நினை-வாகவே திரிந்துகொண்டிருந்த சந்தனு ஒருநாள் ஆற்றங்கரைக்கு வர, அவள் தன் அருமந்த புத்-திரனை தேவவிரதனை அழைத்துக் கொண்டு அரசன் முன்தோன்றி அவனை அரனிடம் ஒப்பு வித்துவிட்டு மறைந்துபோனாள். காணக்கிடைக் காத மனைவி திடீரெனத் தோன்றித் திரும்பவும் மறைந்ததால் அரசர் துயர்க்கடலில் புகுந்

தார். ஆயினும் மனைவியையிழந்த துயரத்தை மகனைப் பெற்ற மகிழ்ச்சியால் மாற்றிக் கொண்டு, அவருக்குக் காங்கேயரென்று பெயரிட்டு, இளவரசுப் பட்டம் சூட்டிச் சிறப்புச் செய்தார்.

சில காலம் கழிந்தது; ஒரு சமயம் சக்கரவர்த்தி காட்டு மிருகங்களினால் குடிகளுக்கு உண்டான துன்பங்களைப்போக்க நினைத்து வேட்டையாடச்சென்று, அது முடிந்தபின் தம் பாசறையை அடைந்தார். அப்போது சுற்றுமுற்றும் திவ்வியமான நறுமணத்துடன் காற்று வீசியது. அம்மணம்காற்றுக்கு இயற்கையானதன்று எனச்சந்தேகித்து அரசர் காற்று வீசிய திக்கு நோக்கி நெடுகச் சென்று ஆராய, ஒரு யோசனை தூரத்துக்கப்பால் காளிந்தி என்ற ஓர் ஆற்றின்கரையில் வர்ணனைக்கு அடங்காத அழகுபொருந்திய ஒருயௌவன மாது நின்றிருப்பதைக்கண்டார். அவளிடத்திலிருந்தே அம்மணம் பரந்தது. கண்டமாத்திரத்தில் அவள் மீது அவர் அடங்காத காதல்கொண்டார். அதன் பிறகு விசாரித்ததில் பரிமளகந்தி என்னும் அப்பெண் செம்படவர்கள் தலைவனான தாஸ ராஜனுடைய புத்திரி என்ற விஷயம் ஏற்பட்டது.

அச் சுந்தரி தாழ்ந்த குலத்தவளானாலும் அவளைக் கலியாணம் செய்து கொள்வதே சரி என்று துணிந்து அவர் தாஸ ராஜனைக் கண்டு தமக்கிருக்கும் விருப்பத்தைச் சாரதியைக்

கொண்டு தெரிவித்தார். தாஸராஜன் இரண்டு குலங்களுக்கும் உள்ள தார தம்மியத்தை எடுத்துக் காட்டியதன்றிக் காங்கேயர் உள்ளவரையில் தன் மகள் வயிற்றில் பிறக்குங் குழந்தைகளுக்குப் பட்டம் கிடைக்காதென்று கூறி, அரசன் விருப்பத்திற்கு இணங்க மறுத்தான். அரசன் இதைக் கேட்டு இருதலைக் கொள்ளி எறும்பேபோல் வருந்தி அரண்மனைக்குத் திரும்பினார்.

அன்று முதல் அரசருக்கு மனஏக்கத்தினால் உடல்வாடி நோயுறுவதாயிற்று. இவ்வாறு எதிர்பாராதபடிநேர்ந்ததுஎதனால் என்று அறிய, உத்தம புத்திரரான காங்கேயர் மிகுதியும் சிரமப்பட்ட பின்பு, தேர்ப்பாகன் நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் கூறினான். உடனே தம் தந்தையின் சுகமொன்றையே மனத்தில்கருதி, காங்கேயர் தாஸராஜனிடம் போய்த் தம் பிதாவுக்கு அவன் பெண்ணை மணம் புரிவிக்குமாறு பல விதங்களிலேயும் வேண்டினார். அதற்குத் தாஸராஜன், 'குணசாலியே, உம் தந்தை என் மகளை மணம் புரிந்து கொள்வதென்றால் அது என் பாக்கியமே. ஆயினும் எனக்கு ஒரு சந்தேகம் உண்டு. நீர் உம் தந்தைக்கு மூத்த புத்திரர்; அவருக்குப் பின் நீரே அரசுக்கு உரியவர். அப்படி இருக்கும்போது என் மகளுக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்குப் பட்டம் ஏது? அப்படித்தான் ஒருசமயம் உம்தந்தை அர-

சுரிமையை அவர்களுக்குக் கொடுப்பவராயிருந்தாலும், நீர் அதற்குச் சம்மதிப்பீரோ? நிகரற்ற உம்முடைய தோள்வலிமையால் இராஜ்ஜியத்தைப் பற்றிக்கொள்ளக் கூடுமே. ஆதலால்தான் யோசிக்கின்றேன்,' என்ருன்.

இதைக்கேட்ட மாத்திரத்தில், காங்கேயர், 'ஐய, எனக்குப் பாட்டன் நீரே; என் தாயும் உம்மகளே. இவ்வரசுரிமையும்என்சகோதரருடையதே.நானேயிருந்து அவர்களுடைய மகுடாபிஷேகத்தை முடித்துவைத்துக் கண்டு களிப்பேன். ஐயுற வேண்டா; இது சத்தியம்,' என்று சபதம் செய்தார். தாஸராஜன் அவரைக் கண்டு அதிசயித்தானேனும் அப்போதும் திருப்தி படவில்லை; அவன் திரும்பவும் அவரை நோக்கி, 'இளவரசே! உம் வரையில் நீர் சத்தியசந்தரே. சொன்ன சொல்தவறி ஒருபோதும் நடக்க மாட்டீர். ஆயினும், உமக்கு ஒரு புத்திரன் பிறந்தால் என்ன செய்வானே? உம்மைப் போலவே உம்முடைய புத்திரனும் இருப்பான் என்று கூற முடியுமோ? அதற்கென்ன செய்வது?' என்று கூறினன்.

அப்போதுதான் காங்கேயர், உலகமுழுதும் தேவர்கள் முதலானவரும் கண்டு நடுங்கிப் பிரமிக்கும் படியான ஒருகொடிய பிரதிக்கினையைச் செய்து பீஷ்மர் (அதாவது, பயங்கரமான விரதத்தை யுடையவர்) என்ற பெயரைச் சூடினர். 'தாஸ

ராஜரே! நீர்கேட்பதும் மெய்தான்! ஆயினும்நான் இப்போது கூறுவதைக் கேளும். நக்ஷத்திரங்கள் ஒளிமழுங்கி ஒழிந்தாலும், சந்திர சூரியர்கள் முறை வழுவினாலும், உலகமே அழிந்தாலும் நான் உமக்குச்செய்துதரும் இவ்வாக்குத்தத்தத்தினின்று விலக மாட்டேன். இதுசத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!! என் உயிருள்ள வரையிலும் மணம் கொள்ளாமல் பிரமசாரியாகவே காலங்கழிப்பேன். புத்திர சந்தானமற்றவர்கள் கொடிய நரகம் புகுவார்கள் என்று நூல்கள் முறையிட்டாலும், தந்தைக்குத் தரும் இதத்தால் அத்துன்பம்நேராமல் நற்கதியே பெறுவேன். நான் கடிமணமே புரிந்து கொள்ள மாட்டேன். இப்போது என் தந்தைக்கு உம் மகளைக் கலியாணம் செய்து கொடுப்பதற்கு என்ன ஆக்ஷேபனை?' என்று கூறி வினவினர். அதன்மேல் மறுத்துச்சொல்ல வேறு இடமில்லையாகையால் தாஸராஜன் திருமணத்திற்குச் சம்மதித்துப் பரிமள கந்தியைப் பீஷ்மரோடு அனுப்பினன்.

பீஷ்மர் தம் தந்தையிடம் நடந்தவற்றைக் கூறிப் பரிமள கந்தியை அவர் முன் விட்டார். அரசர் ஒரு புறம் சொல்லொணாத ஆச்சரியமும் மற்றொரு புறம் அளவு கடந்த துயரமும் அடைந்து தம் புத்திரரை அணைந்து, பலவாறு புகழ்ந்து, அவருடைய அருஞ் செயலுக்குப் பதிலாக இஷ்டமானபோது உயிரை விடும் படியான

ஓர் அரிய சக்தியை (ஸ்வச்சந்த மரண சக்தியை) அவருக்கு அளித்தார். இப்பீஷ்மர் அனைவராலும் போற்றப்பட்டுச் சந்திரகுலதிலகராய் விளங்கினார் என்பது பாரதத்தைப் படிப்பவருக்கு விளங்கும்.

---

## 4. கருடன்.

முற்காலத்தில் காசியபர் என்றொரு மகரிஷி இருந்தார். அவருக்குப் பதினைந்து மனைவியர் இருந்தனர். அவர்களுள் கத்துரு, விநதை என்ற இருவர் சகோதரிகள். இருவரும் வெகுகாலம் வரையில் அன்னியோன்னியமாகவே இருந்தார்கள்.

ஒருநாள் சகோதரிகள் இருவரும் திருப்பாற்கடலின் கரையை அடைந்தனர். அந்தச்சமயத்தில் உச்சைச்சிரவம் என்ற வெண்மை நிறமுடைய தெய்விகக் குதிரை அங்கு உலாவியது. இருவரும் அதைப்பற்றிப் பேசலாயினர். கத்துரு வேடிக்கையாக, 'விநதா, சந்திரனைப் போன்ற வெண்ணிறம் உடைய இக்குதிரைக்கும் வாலில் ஒரு களங்கம் இருக்கிறது பார்,' என்று சொன்னாள். அதற்கு விநதை, 'கத்துரு, நீ ஏன் இப்படிப் பிசகான ஒரு விஷயத்தைச் சொல்லுகிறாய். நீ தான் சொன்னாலும் எனக்குத் தான் கண் இல்லையோ? அக்குதிரை மாசற்றவெண்மை நிறமேஉடையது,' என்று உரைக்க, மற்றவள் அதுவே சரியென்று தெரிந்திருந்தும் தான்பிடித்த முயலுக்கு மூன்றே

கால் எனச் சாதிப்பவரைப்போல மறுத்துக் கூறி னாள். வரவரப்பேச்சுமுற்றினது. அதை நேராகப் போய்ப் பார்க்க வேண்டுமென்று இவர்கள் முயல்வதற்குமுன் உச்சைச்சிரவம் அவ்விடத்தை விட்டு அகன்று சென்றது. அதனால் இருவரும் திரும்பவும் அங்குமறுநாள் வந்துகுதிரையருகில் போய்ப் பார்ப்பதென்றும், எவளுடைய வாதம் பொய்த்துப் போகிறதோ அவள் மற்றவளுக்கு அடிமையாய்விடுவதென்றும் ஒப்புக்கொண்டு தம் இருப்பிடங்களை அடைந்தார்கள்.

இருப்பிடத்தையடைந்த கத்துரு, தன்மக்களாகிய ஆதிசேஷன் வாஸுகி முதலிய ஸர்ப்பங்களை அழைத்து விநதையோடு தான் செய்துகொண்ட ஒப்பந்தத்தைப்பற்றிக்கூறி, ‘குழந்தைகளே, நான் சொன்ன சொல்லை நிரூபிப்பதற்காக உங்களில் எவனேனும் போய் உச்சைச்சிரவத்தின் வாலில் களங்கம் ஊட்டவேண்டும்,’ என்று கட்டளை இட்டாள். உத்தமர்களாகிய ஆதிசேஷன் முதலானவர்கள் இக்கொடிய பாபத்தைச் செய்ய உடன்படவில்லை. கார்க்கோடகன் என்ற கொடிய ஸர்ப்பக் குமாரன் மாத்திரம் உடன்பட்டு விரைந்துசென்று தெய்விகக்குதிரையின் வாலில் விஷத்தைக் கக்கிக் கருநிறம் ஊட்டினான்.

மறுநாள் சகோதரிகள்இருவரும் திருப்பாற்கடற்கரையை அடைந்து நின்றபோது உச்சைச்-

175451 600 005

சிரவம் அங்குவர, அருகிற்சென்று பரீக்ஷித்தனர். வாலில் களங்கம் இருந்தது. ஆதலால், விநதை, சூதுஒன்றும் அறியாதவளாய்த் தன் வாக்கின்படி கத்துருவுக்கு அடிமையானாள். பின்பு அவள் தன் கதியை நினைத்து வருந்தித் தன்னை விடுதலை செய்யும்படி சகோதரியைக் கேட்டாள். கத்துருவோ முதலில் ஒரே பிடிவாதமாக மறுத்துப் பின்பு சுவர்க்கலோகத்திலே தேவர்கள் வசத்தில் உள்ள அமிருத கலசத்தைப் பெற்றுத் தந்தால் விடுதலை பெறலாம் என்று சொன்னாள். இதனைச் சாதிக்க துணையற்ற அடிமையாகிய விநதைக்கு எவ்வாறு முடியும்? அதனால் அவள் மனம் புழுங்கி வருந்தியிருந்தாள்.

கொஞ்சகாலத்துக்குப் பிறகு விநதை காசியப முனிவரருளால் கருடன் என்ற உத்தம புத்திரனைப்பெற்றாள். கருடன் மிக்கபராக்கிரமம் வாய்ந்தவனாக இருந்தான். வெகுகாலம் வரையில் தாயும் பிள்ளையுமாகிய இருவரும், கத்துருவும் அவள் மக்களும் இடுகின்ற குற்றேவல்களை யெல்லாம் புரிந்து வரும்படியிருந்தது. அப்போது ஒருநாள் கருடன் தன் தாயைப் பார்த்து, 'அம்மா, தனியே இருக்கும்போதெல்லாம் நீங்கள் துயரத்துடனே இருக்கின்றீர்கள். நாமிருவரும் கத்துருவுக்கும் அவள் மக்களுக்கும் அடிமைத் தொழில்செய்யும்படி இருக்கின்றது. இது நேர்ந்தது எப்படி?

எதைச் செய்தால் நீங்கள் விடுதலை பெற்று மகிழ்வீர்கள்?' என்று கேட்டான். விநதை தன் மகனால் அமிருதகலசத்தைக்கொண்டுவருவதான அசாத்தியமானகாரியத்தைச் செய்யமுடியாதென்று நினைத்துச் சும்மாவிருந்தாள். ஆயினும் கருடன் அவளைப் பன்முறை வற்புறுத்திக் கேட்டு, உள்ளவிஷயத்தைத் தெரிந்து கொண்டு, உடனே தனக்கு நேர்ந்த சங்கடங்கள் எவற்றாலும் மனந்தளராமல் சுவர்க்கலோகப்போய் அமிருத கலசத்தைக் காத்திருந்த வலிய தேவகணங்களை வென்று அதைக் கைக்கொண்டு மீண்டான்.

இடைவழியில் திருமால் அவனைக் கண்டு தடுத்து, இருபத்தொரு தினங்கள்வரையில் கடுமையான யுத்தம் செய்தார். கருடன் அதிற் சிறிதும் பின்னிடாமல் போரிட்டதைக் கண்டு மகிழ்ந்து அவனைச் சமாதானப்படுத்தித் தம் வாகனமாகக் கொண்டார். இவ்வாறு சிறப்புற்ற கருடன் திருமாலின் உத்தரவு பெற்றுக் கத்துருவினிடம் போய் அவளிடம் அமிருதகலசத்தைக் கொடுத்துத் தன் தாயை அடிமைத்தனத்தினின்றும் விடுவித்தான். இவனுடைய பெருமை எப்படிப்பட்டது!

---

## 5. அனப்பியஸம் ஆம்பிநோமஸம்.

ஐரோப்பாக்கண்டத்தில் இடலிதேசத்துக்கு அருகில் உள்ள ஸிஸிலித் தீவில் எட்னு என்று

ஒருபெரிய எரிமலை யிருக்கின்றது. அவ்வெரிமலை அடிக்கடி திடீரென்று வெடித்துத் தீயைக் கக்கிப் பலவிதமான சேதங்களைஉண்டுபண்ணுவதுவழக்கம். பொருளழிவும் ஜீவராசிக்குப் பிராண ஹானியும் எடுத்துரைக்க முடியாத அளவு உண்டாகும்.

இப்படிப்பட்ட எட்னாவிற்குக் கொஞ்ச தூரத்தில் உள்ள ஒரு கிராமத்தில் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு, தள்ளாத பெரியோர்கள் புருஷனும் மனைவியுமாக இருவர் இருந்தார்கள். இவர்களுக்கு அனப்பியஸ், ஆம்பினோமஸ் என்ற சற்புத்திரர்கள் இருவர் தோன்றி யிருந்தனர். இவர்கள் இருவரும் பெற்றோர் சொல்லைக்கடவாமல் அவர்கட்கு எவ்விதத்திலும் இதம்தேடுவதையே கடமையாகக் கொண்டவர்கள்.

ஒருசமயம் எட்னா எதிர்பாராதபடி வெடித்துக் கற்குழம்பை மிகுதியும் கக்கியது. அது நாலா பக்கங்களிலும் ஆறுகளாக வழிந்து சென்று சூழ்ந்திருந்த கிராமங்களில் உள்ள ஜனங்களுக்கும் கால்நடைகளுக்கும் எண்ணிறந்த பொருள்களுக்கும் அழிவை உண்டுபண்ணியது. ஜனங்களெல்லோரும் தங்கள் தங்கள் வசமிருந்த அரிய பொருள்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு உயிர் தப்பினாற்போதும் என்று பலபக்கங்களிலும் ஓடலானார்கள். அப்படி ஓடிய இவர்களுள்ளும் கற்குழம்பின் பிரவாகத்தில் அகப்பட்டு அழிந்தவர் மிகப்பலர்.

உயிர் தப்பினால் போதும் என்று ஓடியவர்களுள், அனப்பியஸ்ஸும் ஆம்பினோமஸ்ஸும் அவர்களுடைய பெற்றோர்களும் இருந்தனர். சகோதரர்களும் மற்றவர்களைப்போலவே பல அரிய பொருள்களையும் எடுத்துக்கொண்டு தாய் தந்தையரையும் கைகளைப்பிடித்து அழைத்துக்கொண்டு போயினர். ஆயினும் வெகு சீக்கிரத்தில் தள்ளாத அப்பெற்றோர்களால் நடக்கக் கூடவில்லை. கற்குழம்பாறும் கண்ணுக்குத்தெரியும்படியான தூரத்துக்கு வந்து விட்டது. ஆகவே சகோதரரிருவரும், 'பொருள் போனாலும் பின்னும் சம்பாதித்துக் கொள்ளலாம். இது பெரிதல்ல. நாம் இக்கொடுமையினின்றும் தப்புகிறோம் என்கிற நிச்சயம் இல்லை. ஆயினும் நம் உடலில் உயிர் தங்கியிருக்கும் வரையில் தள்ளாத நம் பெற்றோரைக் காப்பாற்ற வேண்டும். அவர்களே நமக்குச் சகலமான பொருளும் ஆவார்கள். அவர்களைக் காப்பாற்ற முன் வாராத நம் தேகம் எதற்கு?' என்று சிந்தித்து, கையில் இருந்த வேறு பொருள்களை யெல்லாம் வீசி எறிந்து, பின்பு, தாயை ஒருவனும் தந்தையை ஒருவனுமாகத் தம் முதுகில் இட்டுத் தூக்கிக்கொண்டு போனார்கள்.

என்ன ஆச்சரியம்! உக்கிரத்தோடு பெருகி ஓடிய கற்குழம்பாறு, அனப்பியஸ்ஸும் ஆம்பினோமஸ்ஸும் அவர்களுடைய பெற்றோர்களோடு

செல்லும் மார்க்கத்தைமட்டும் விடுத்து வேறு திசைகளில் பெருகுவதாயிற்று. அதன்பின்பு சற்புத்திரர் இருவரும் ஒருபுலத்தில் பத்திரமான ஓரிடத்தில் தம் பெற்றோர்களைக்கொண்டு சேர்த்தனர். இவர்களுடைய அன்பே அன்பு!

எவ்வித கொடுமைக்கும் அஞ்சாமல் பிதுர்ப் பக்தியையே பெரியதாக மதித்து மேன்மை அடைந்த இவர்கள் சென்ற வழிக்குச்'சற்புத்திரர் மார்க்கம்' என்றும் தங்கிய வயலுக்குப் 'புனிதர் புலம்' என்றும் பெயர்கள் நாளைக்கும் வழங்கிவருகின்றன. வேறு எந்த நிலப்பகுதி பயிரழிந்து நின்றாலும், எக்காலத்திலும் தான் மட்டும் விளைவு குன்றாமல் அப்புலம் இன்னமும் தவறாது விளைந்து பலன் தந்து பச்சைப்பசேலென விளங்குகின்றதாம்.

சற்புத்திரர்கள் மேற்கொண்ட காரியம்எவ்வளவு அசாத்திய மானதானாலும், ஈசுவரன் அவர்கள் பால் அருள்பாராட்டி எவ்விதத்திலும் நன்மையே புரிந்து மேன்மையை உண்டாக்குவார் என்பதற்கு ஓர் ஐயமும் உண்டோ?

---

## 6. சூரபதுமன் மகன் இரணியன்.

அரக்கர்களுடைய குலத்திற்கு அரசனும், தேவர்களுக்குப் பரமசத்துருவும், முருகக் கடவுளால் பகைக்கப்பட்டவனுமான சூரபத்மன்என்று

ஒரு வீரன் இருந்தான். அவனுக்கு இரணியன் என்ற அதி சூரனான ஒரு புத்திரன் இருந்தான். இவன் பிதுர்ப்பக்தி மிகவும் உடையவன். கொடிய குலத்தில் பிறந்தவனே ஆனாலும் இவனுடைய செய்கைகளிற் பல அரியனவாயிருந்தன.

தேவர்களுடைய வேண்டுகோளின்படி சுப்பிரமணியக்கடவுள் சூரபத்மனோடு யுத்தம் செய்தார். அதில் அவருடைய உடன் பிறந்தவர்களாகக் கூறப்படும் ஒன்பது ஒப்புயர்வற்ற வீரர்களில் முதன்மை வாய்ந்தவரான வீரபாகு தேவரோடு இரணியன் மலையநேரிட்டது. வெற்றிதோல்விகள் நிச்சயமில்லாமல் இருவரும் நெடுங்காலம் கடும் போரிட்டனர். இறுதியில் இரணியன் சேனையும் தேரும் குதிரையும் இழந்து பதாதியாகவே நின்றான். அவனோ மகா வீரன்; எதுவரினும் போரில் புறங்காட்டிச் செல்ல மனமற்றவன். வலி முற்றும் அடங்கியபோதும் அவன் வீரத்தோடு மாள்வதே சரியென்று துணிந்து நிற்கும்படி நேரிட்டது.

அப்போது அவன் தன் தந்தையைப்பற்றிச் சிந்திக்கலானான். ஒருசமயம் தான் போரில் முன் வைத்தகாலைப் பின்வைக்காமல் அழிவதாக இருந்தால்தன் தகப்பனுக்கு அந்தியக்கிரியைகளைச்செய்பவர்யார்? தானிறந்தால் உடனே அவனும் இறப்பது நிச்சயம். ஆகையால்என்னசெய்வதென்றுஒரு



ஸி. வி. அரங்கனாத சாஸ்திரி

BLOCK LENT BY THE ALLIANCE Co.,

சமயம் வருந்துவான். இவ்வாறு, தனக்குக்கோழை என்ற வசைநேருமே என்ற ஏக்கம் ஒரு புறமும், தன் தந்தைக்குப் புத்திரனில்லாத பாவி என்ற வசைநேருமே என்ற ஏக்கம் மற்றொரு புறமுமாக நெடு நேரம் அவனை வாட்டின.

கடைசியில் அவ்வுத்தமபுத்திரன், 'தந்தைக்குப்பிதுர்க்கடன் செய்யாத என் உடல் எதற்கு? எனக்கு எப்பழி வந்தாலும் என் தந்தைக்குப் பழி வரலாகாது,' என்று துணிந்து, பிதுர்க்கடன் ஒன்றையே கருதித் தந்திரமாகத் தப்பித்து ஓடினான். தன் பழியையும் கருதாது கடமை ஒன்றையே பெரிதாகக் கருதிய இவ் வதிசூரனுடைய செய்கையை எவர்தான் வியவார்!

---

## 7. ஸி. வி. அரங்கநாத சாஸ்திரி.

ஸி. வி. அரங்கநாத சாஸ்திரி சமீப காலத்தில் வாழ்ந்திருந்தவர். அவர் 1819-ம்வருஷத்தில் சித்தூருக்கு அருகிலுள்ள ஒரு குக்கிராமத்தில் ஏழைப் பிராமண குடும்பம் ஒன்றில் பிறந்தவர். அந்தக் காலத்தில், சிலர், நிலத்தைச் சாகுபடி செய்து கந்தாயங்களை வசூலிக்கிற உரிமையை சர்க்காராரிடத்தில் மனுக்கொடுத்துப் பெற்று அதனால் கிடைக்கும் சொற்பலாபத்தைக் கொண்டு ஜீவித்துவருவதுண்டு. ஏழைப்பிராமணரான அரங்கநாத சாஸ்திரியின் தந்தையாரும்

இவ்வாறு ஒரு 'இஜாரா'வை, மனுக்கொடுத்துக் குத்தகைக்கு எடுத்தார். ஆனாலும் துர்திர்ஷ்ட வசத்தால் மழை பெய்யாமற்போக, இவருக்கு நஷ்டம் உண்டாயிற்று ; அரசாங்கத்தாருக்குச் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்தச் சக்தியில்லாமற்போயிற்று. அதனால் அதிகாரிகள் அவரைச் 'சிவில் ஜெயி'லில் சிறை வைத்தார்கள்.

இப்படிக் கொஞ்சநாள் ஆன பின்பு, அரங்கநாத சாஸ்திரியாரின் பாட்டனாருடைய திவசம் நெருங்கியது. அவருடைய பெரியோர்களும் உற்றார் உறவினரும் சிறந்த வைதிகர்கள். அதனால் சாஸ்திரியாரின் தாயார் மிகுதியும் மனமுளைந்தவராய் அவரைப் பார்த்துத் துக்கம் பொறுக்காமல், 'அரங்கநாதா, உன்னுடைய பிதா செய்யவேண்டிய பித்ரு கைங்கரியம் எவ்வாறேனும் நடைபெற வேண்டுமே, என்ன செய்வதப்பா!' என்று கூறி அழுதாள்.

அப்போது அரங்கநாதருக்கு வயது பத்தேதான் ஆயிருந்தது. அவர் அவ்விஷயத்தினுடைய முக்கியத்தை நன்கு உணர்ந்தவராகையினால், தாயின் துயரத்தைப் பார்க்கச் சகியாமல் மனம் வருந்திப் பின்பு, ஒருவரும் அறியாதபடி வீட்டை விட்டு அகன்றார். வீட்டில் உள்ளவரும் பிறரும் பலவிடங்களிலும் தேடியும் அவரைக் காணவில்லை. அவரோ, சித்தூருக்கு ஓட்டமாக

ஓடி அந்த ஜில்லாவின் அதிகாரியாயிருந்த காஸா மேஜர் துரையின் சமூகத்தை யடைந்து தம் தந்தை செய்யவேண்டிய அவசியமான காரியத்-தைப் பற்றி மனங்கரையக் கூறி, அவரை அது வரையில் மட்டுமாவது விடுதலை செய்யும்படி மன்ருடினர். துரையவர்கள் சிறுவரைப் பார்த்து, 'மெய்தான்; ஆயினும் நான் உன் தந்தையை அனுப்புவதற்குப் பிணை வேண்டுமே, அதற்-கென்ன செய்வது,' என்ருர். சிறுவர், 'யஜமானே! என் தந்தைக்குப் பிணை என்னை யன்றி வேறு ஒருவரும் இல்லை. ஆகையால் பித்ரு கைங்கரியம் முற்றிய பின்பு என் தந்தையார் திரும்பி வரும் வரையில் நானே அவருக்குப் பிணையாய் ஜெயிலில் இருக்கிறேன். கொஞ்சம் தயவு புரியவேண்டும்,' என்று வேண்டினர்.

அதைக் கேட்டவுடன் துரையினுடைய மனம் உருகி விட்டது. சிறு பாலகரா யிருந்த இவர் தந்தையினிடம் வைத்த அன்பின் பெருமை யைக் கண்டு வியந்து, 'அப்பா, உன் செய்கைக்கு மெச்சினேன். நீ பிணை இருக்க வேண்டியதில்லை. உன் தந்தைக்கு விடுதலைப் பத்திரம் இதோ தருகின் றேன், அழைத்துப்போ,' என்று கூறி இருவரை யும் சேர்த்து ஊருக்கனுப்பினர். ஏற்கெனவே இருந்த மனத்துயரோடு புத்திரனையும் காணமல்

தவித்துக் கொண்டிருந்த அரங்கநாத சாஸ்திரி-யின் தாயார், தகப்பனாரும் பிள்ளையுமாக வீடு வந்து சேர்ந்ததைக் கண்டு அளவில்லாத ஆனந்தம் அடைந்தாள். பிதுர்க்கடனும் நிறைவேறியது.

அதன்பின் காஸா மேஜர் துரையும் இன்னும் சிலருமாகச் சிறுவரான அரங்கநாதருக்-குக் கல்வி பயிற்றுவித்து முன்னுக்குக் கொண்டு வந்தனர். இவரும் தம் உழைப்பினால் படிப்படி யாகப் பதவியில் உயர்ந்து இறுதியில் சென்னையி லுள்ள 'ஸ்மால் காஸ்' கோர்ட்டில் நியாயாதிபதி யாக அமர்ந்தார். இவரே அப்பதவியை முதலில் வகித்த இந்தியர். இவரே சர்வ கலா சங்கத்தில் முதன் முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுதேச அங்கத்தினர். இவர் தாய் மொழியில் தவிரப் பதினைந்து இதர பாஷைகளிலும் பாண்டித்தியம் பெற்று அரோக திடகாத்திரத்தோடும் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்திருந்து, 1881-ம் வருஷம் இப்பூத உடலை நீத்தார். இவ்வளவு பெருமைக்-கும் ஆதிகாரணமாயிருந்தது அவருடைய பிதுர்ப் பக்தியேயன்றோ?

---

## 8. தருமாங்கதன்.

முற்காலத்தில் ருக்மாங்கதர் என்று ஓர்சக்கர-வர்த்தி இருந்தார். செங்கோன்மையும், குடிக

ளிடத்தில் அருளும்,தெய்வ பக்தியும்,சிறந்த அறி-வும், எல்லா நற்குணங்களும் அவரிடம் குடி கொண்டிருந்தன. அவர் உத்தம பத்தினி ஒருத்-தியை மணம் புரிந்து கொண்டு இல்வாழ்க்கையை இனிமையாக நடத்தி வந்தார். அக்காலத்தில் அவருக்குத் தருமாங்கதன் என்ற சற்புத்திரன் ஒருவன் தோன்றினான். அறிவிலும் வயதிலும் குணத்திலும் முதிர்ந்த சில பெரியோர்கள், ருக்-மாங்கதரை ஏகாதசி விரத மனுஷ்டித்து வரும் படி போதித்திருந்தனர். அவரும் அப்பெரியோரு-டைய சொல்லின்படியே அவ்விரதத்தைத் தவரு-மல் கொண்டு ஒழுகி வந்தார். தாம் அனுஷ்டித்து வந்ததைப் போலவே தம் குடிகளும் அவ்விர-தத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்று அவர் கட்டளை பிறப்பித்திருந்தார்.

ருக்மாங்கதருடைய மனவுறுதியைப் பரீக்ஷை செய்ய வேண்டும் என்று தேவர்கள் கருதி மோகனாங்கி என்ற தெய்வப் பெண் ஒருத்தியை ஏவினர். அவள் ருக்மாங்கதர் முன்பு தோன்றித் தன்னுடைய பல நலங்களாலும் அவருடைய மனத்தைக் கவர்ந்துகொண்டாள். அவர் தம்மை மணந்து கொள்ளும்படி அவளை வேண்டிக் கொண்டார். அவள் முதலில் மறுப்பது போல் பாசாங்கு செய்து,பின்பு தனக்கு வேண்டிய போது

ஒரு வரமளிப்பாரானல் அவர் விருப்பத்தின்படி நடப்பதாகக் கூறினுள். அரசர் அப்படியே ஒப்புக் கொள்ளத் திருமணம் நடந்தேறியது. வெகு காலம் வரையில் அவள் ஒருவித சிரமமும் தராமலும் அரசன் மனங் கோணுமலும் இருந்து பலவித சுகங்களையும் அனுபவித்து வந்தாள்.

பின்பு ஒரு ஏகாதசி யன்று அவள் தான் உலகுக்கு வந்த காரியத்தை நிறைவேற்ற மனங்கொண்டாள். ஏகாதசி தினத்தன்று சக்கரவர்த்தி பட்டினி இருப்பது வழக்கம்; ஒரு சொட்டுத் தண்ணீரைக் கூடக் குடிப்பதில்லை; அந்நாள் முழுதும் தேவ ஆராதனையிலேயே கழித்து இரவு விழித்திருந்து மறுநாள், அதாவது துவாதசியன்று, அதிகாலையில் எழுந்து ஆராதனை முடிந்த பின்பு அதிதிகளுடன் போஜனம் செய்வார். அப்படிப் பட்ட விரதத்தினின்றும் அவரை வழுவச் செய்ய வேண்டும் என்று மோகனுங்கி துணிந்திருந்தாள். ஆகையால் அவள் அன்று அவரை அணுகி, மற்ற நாட்களிற்போலத் தன்னிடம் கூடிக் குலாவியிருக்க அழைத்தாள். ருக்குமாங்கதர் மனம் பதைத்து அதற்கு உடன்படாமல் காரணங்கூறி மறுத்துரைத்தும் அவள் கேட்கவில்லை. அவரும் ஒரே பிடிவாதமாயிருக்க, இது தான் தக்க சமயம் என்று நினைத்து அவள் அவர்முன்பு தருவதாகச்

சொல்லியிருந்த வரத்தை வேண்டினாள். அரசர் அவ்வரத்தைக் கேட்கும்படி கூறினார்.

மோகனாங்கி, 'அன்பரே, நீர் தினமும் போல் இன்று என்னோடு சந்தோஷமாகக் காலங் கழிக்க வேண்டும். இதுவே நான்வேண்டும் வரம்,' என்றாள். அரசரோ தம் செவிகளைப் பொத்திக் கொண்டு,'ஹரி! ஹரி!! இவ்வரத்தைத் தவிர வேறு எது வேண்டுமானாலும் கேட்டுப் பெற்றுக் கொள்; என் விரதத்தை மாத்திரம் பங்கம் செய்யாதே,' என்று கூறினார். அதன்மேல் மோகனாங்கி, 'அரசே, நான்கேட்ட அவ்வரத்தைத் தர இஷ்டம்இல்லாவிட்டால் வேறொரு காரியமாகிலும் செய்யும். உம்முடைய பட்டமகிஷியின் கண் முன்பாக உம்முடைய மகனை தருமாங்கதனுடைய தலையை வெட்டி எனக்குத் தாரும். ஸத்தியஸந்தர் என்றும் பராக்கிரமசாலி என்றும் பெயரெடுத்த நீர் உம் வாக்கைத் தவறி நடக்க மாட்டீர் என்று நினைக்கிறேன்,' என்று சிறிதும் இரக்கமில்லாமல் கூறினாள்.

ருக்மாங்கதர் அச் சுடு சொல்லைக் கேட்டதும் இடியுண்ட சிங்கம் போல் நடுங்கினார். 'ஆகா! இவளென்ன காளியின் அவதாரமோ? நரபலி கேட்கிறாளே! என்ன கொடுமை!என்ன கொடுமை!! இவளைக் கல்யாணம் செய்துகொண்ட மூடனை

என்னை யன்றோ நிந்திக்கவேண்டும்? என் தலை விதியை நொந்து கொள்ளவல்லவோ வேண்டும்? இவளைச் சொல்வதில் பலனென்ன? இவள் மலடி யானதால் மகப்பேற்றின் அருமை அறியவில்லை. கடின சித்தமுடையவளா யிருக்கிறாள். என் அரு மந்த புதல்வனை எவ்வாறு வெட்டுவேன்? அவன் என்ன நினைக்க மாட்டான்! என் மனைவிதான் எப்படிச் சகிப்பாள்! இத்தரும சங்கடத்திற்கு என் செய்வேன்,' என்று பலவாறு புலம்பிக் கண்ணீர் சொரிந்து மூர்ச்சித்துப் போனார்.

அத்தருணம் தருமாங்கதன் அவ்வழியே வந்தான். தருமாங்கதன் தன் தந்தைக்கு இதம் தேடும் உத்தமத் தனயன்; புத்திமான்; அறநெறி பிறழாதவன்; நிகரற்றவீரன். இவ்வாறு நற்குணங்கள்எல்லாம் திரண்டு ஓர் உரு எடுத்தாற்போன்ற அவன் தந்தை மூர்ச்சித்ததையும் மோகனாங்கி கோபித்து இருந்ததையும் கண்ணுற்று விரைந்து வந்து அம்மாதின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி,'அன்னையே, என்ன நேர்ந்துவிட்டது? நீங்கள் ஏன் ஒருவாறாகஇருக்கின்றீர்கள்? தந்தையார் ஏன்மூர்ச்சித்து விட்டார்?என்னிடம் ஒளியாமல் சொல்லுங்கள். எப்படிப்பட்ட மனக்குறையானாலும் தீர்த்து வைக்கிறேன். தாங்கள் எனக்குத் தாயார் தானே! தங்கள் மனது புண் பட்டிருப்பதைப் பார்க்க என்

மனம் எப்படிச் சகிக்கும்? உடனே கூறுங்கள், அம்மணி,' என்று வேண்டினன்.

மோகனங்கி, 'தருமாங்கதா! ஒன்றும் விசேஷமில்லை. சக்கரவர்த்தியார் எனக்கு ஒருவரம் தந்திருந்தார். அதை நான் எனக்கு இஷ்டமானபோது கேட்டுப்பெற்றுக் கொள்ளுவதாகச் சொல்லியிருந்தேன். இன்று அவ்வரத்தை நிறைவேற்றும்படியாகக்கேட்டேன். அவரோ ஒன்றும் செய்ய மனமில்லாமலிருக்கிறார். வாக்களித்த பின்பு வரம் தரமாட்டேன்என்பது நியாயமாகுமா?உலகனைத்தையும் ஒருகுடையின் கீழிருந்துஆளும் சக்கரவர்த்தி சத்தியம் தவறலாமா?' என்று சொன்னாள். தருமாங்கதன் தன் தந்தையின் குணத்தை நன்குஅறிவானதலால், அதை விளங்கக் கூறும்படி கேட்க, அவள் சக்கரவர்த்தியை நேரில் கேட்டுக்கொள்ளும்படி கூறினாள்.

உடனே தருமாங்கதன் இரண்டு கைகளாலும் அவரைத் தூக்கி உட்கார வைத்துக் களையைப் போக்கினன். ஆயாசம் தீர்ந்த ருக்மாங்கதர் கண் விழித்துப் புத்திரனுடைய முகத்தைக் கண்டு சிறு குழந்தையைப்போல் தேம்பித்தேம்பி அழலானார். அருமந்த புதல்வன் அவர் துயரைக் காணச் சகியாமல், 'அப்பா, ஏன் இவ்வாறு துக்கப்படுகின்றீர்கள். நான்உள்ளவரை உமக்குஆகவேண்டியது

அனைத்தையும் பூர்த்தி செய்விப்பேன். அவ்வாறு செய்யாமலிருப்பேனானால் இச்சன்மத்தின் பலன் தான் என்ன,' என்று மனம்உருகச் சொன்னான்.

அதன்மேல் ருக்மாங்கதர், 'குழந்தாய்! இந்தத் தரும சங்கடத்திற்கு என் செய்வது? எப்போதோ நான் தந்திருந்த ஒரு வரத்தைத் தரும்படி உன்சிற்றன்னைஇப்போது நிர்ப்பந்திக்கிறாள். அதன்படி நடந்தால் என் ஏகாதசி விரதத்திற்குப் பங்கம் வந்து விடுகின்றது; விரத பங்கம் வராமல் காப்பதென்றால் நான் உன்னை இழக்க வேண்டுமடா, என் செல்வமே! உன்னைப் பத்து மாதம் சுமந்தெடுத்துப் பெற்ற தாயின் கண்முன்பாக உன் தலையை வெட்டித் தரவேண்டுமாம் அக்காளிக்கு! ஆகா! நான் என்னசெய்வேன்! இத்தர்ம சங்கடத்தில் சிக்கிக்கொண்டு வருந்துவதைப் பார்க்கிலும் என் உயிரை இழப்பதே மேல்,' என்று சொல்லித் துக்கித்தார்.

அச்சற்புத்திரன், 'எந்தாய்! இதற்கோ இவ்வாறு துயரப்படுவது? சந்திர சூரியர்களும் நக்ஷத்திராதிகளும் நிலைபெயருவன ஆனாலும், உலகமே அழிவதானாலும் நீங்கள் சொன்ன சொல்லைத் தவறலாமோ? என் உடல் பொருள் ஆவி அனைத்தும் உங்களுடையனவே அல்லவோ? நான் இறந்தாலும் பாதகமில்லை. உமது விரதம் காக்கப்

படுமல்லவா? சரீரம் நிலையற்றது. என்றைக்கேனும் இஃது அழிய வேண்டுவது தானே. அதற்கு வருத்தம் ஏன்? சிற்றன்னையாருடைய மனம் வருந்தாதபடி இப்போதே அவருக்கு நீங்கள் கொடுத்த வரத்தை நிறைவேற்றலாம். எழுந்திருங்கள்! நானும் அம்மாவைப்போய் அழைத்துக் கொண்டு ஒரே நொடியில் வருகிறேன். கற்புக்கரசியாரான என்னம்மை தங்கள் துயரத்தைக் காணச் சகியார்; தங்களுடைய சங்கடத்தைப் போக்கவே முன் வருவார். இதோ போய் வருகின்றேன், நீங்கள் தயாராகுங்கள்,' என்று கூறி நேராகத் தன் தாயினிடம் சென்றான்.

சென்ற தருமாங்கதன் அன்னையை வணங்கினவுடன் அவள் அவனை ஆசிர்வதித்து அவனுடைய முகக்குறிப்பைக் கண்டு என்ன விஷயம் என்று கேட்டாள். அவன் ருக்மாங்கதருடைய தரும சங்கடமான நிலைமையை விளக்கமாகச் சொல்லி, 'அன்னையே, என் தலையை இழந்தாகிலும் அவருடைய விரதத்திற்குப் பங்கம் வராமல் காப்பேன். கட்டளை இட்டருள்வீராக,' என்று பிரார்த்தித்தான். அக்குலமகள், 'குழந்தாய், உன் தலையில் ஈசன் இப்படியோ எழுதினான்? நான் இதை எவ்வாறு சகிப்பேன்,' என்று துடிதுடித்து ஸ்மரணை இழந்தாள்.

தருமாங்கதன் அவளுக்கு ஸ்மரணை வரும்படி செய்து பின்பு, 'தாயே! உத்தம பதிவிரதையான தங்களுக்கு அற்பனுன நான்சொல்லவேண்டியது என்ன இருக்கின்றது? ஆயினும் சக்கரவர்த்தியாரைக் கவனியுங்கள். அவருடைய சங்கடத்தைப் போக்க வேண்டியது பதிவிரதையான தங்களுக்கும் பெற்றெடுத்த எனக்கும் உரிய கடமை அல்லவா? தருமத்தைக் கவனிக்க வேண்டும். அதுவே தலைகாக்கும் அல்லவா? எல்லாம் அவன் செயலே; நம்மால் ஆவது ஒன்று மில்லையே!' என்ருன்.

அக்கற்பரசி, எது வரினும் கணவன் துயரைத் தீர்ப்பதே சரி என்று துணிந்து சக்கரவர்த்தியாருடைய சன்னிதானத்தையடையத் தருமாங்கதனேடு புறப்பட்டுச் சென்ருள். இருவரும் ருக்குமாங்கதருடைய பாதங்களில் விழுந்து வணங்கி எழுந்த பின்பு, தருமாங்கதன் அவர் மனத்தைத் தேற்றித் தம்வாக்கையும் விரதத்தையும் காப்பாற்றிக் கொள்ளும்படி கூற, அவரும் அவர்களை மோகனங்கியின் முன்னே அழைத்துப் போய்ச் சிறுவனை வெட்ட வாளை ஓங்கினர். மோகனங்கி அப்போதும் தடுத்து இக்கஷ்டத்திற்கு ஆளாகாமல் தன்னேடு ஸந்தோஷமாகக் காலங் கழிக்கும்படி வேண்டினள். ஆனல் சற்புத்திரனுன தரு-

மாங்கதனே, 'தந்தாய், தருமம் தவறவேண்டாம். தங்கள்பால் என்கடமையைச்செலுத்தி அன்பைக் காட்டச் சந்தர்ப்பம் வாய்த்திருப்பதனால் என் மனம் பூரண சந்தோஷத்தையே அடைந்திருக் கின்றது. இனித் தயங்காமல் என் சிரத்தைக் கொய்து சிற்றன்னையாருக்குக் கொடுத்த வரத்தை நிறைவேற்றுங்கள்,' என்றான்.

சக்கரவர்த்தி முழுப் பாரத்தையும் கடவுளின் மீது போட்டுவிட்டு, ஹரி!ஹரி!! என்று சொல்லிக் கொண்டே தன் மகன் கழுத்தில் வாளை வீசினார். என்ன ஆச்சரியம்! பாலகனுடைய கழுத்தில், கத்தி வெட்டி வீழாமல் பூமாலை விழுந்தது. தேவர்கள் மலர்மாரி பொழிந்தார்கள். தயாபரர் ஆகிய பகவான் அசரீரியாகத் தோன்றி அவனைத் திரும்பவும் வாளை ஓச்சவொட்டாமல் தடுத்து, 'ருக்மாங்கதா, நில்! நில்!! நோன்புகாக்கும் உன்னுடைய அற்புத மனவுறுதிக்கும், ஒப்புயர்வற்ற தருமாங்கதனுடைய பிதுர்ப்பக்திக்கும் உன் மனையாளின் பாதிவிரத்தியத்திற்கும் மெச்சினோம். நீங்கள் புண்ணியசாலிகள். இனி, பாபலோகமாகிய இப்பூமியை விட்டு உங்களுக்கென வந்துள்ள திவ்விய விமானத்தில் ஏறிக்கொண்டு பரமபதத்திற்கு வாருங்கள்! மோகனாங்கியின் மீதும் குற்றமில்லை. அவள் ஒரு தெய்வப் பெண்.

உனது விரதத்தின் உறுதியைப் பரிசோதிக்கும்படி அனுப்பப்பட்டவள்,' என்று கூறினர். மோகனங்கி தன்னுலகம் சென்றுள்.

பின்பு அங்குத்தோன்றிய திவ்விய விமானத்தில் ஏறிக்கொண்டு ருக்மாங்கதரும் அவருடைய சிறந்த மனைவியும் புத்திரனும் பரமபதத்தை அடைந்தனர்.

## 9. நாபாகன்.

முற்காலத்தில் நீதிமானுகவும் ஞானியாகவும் விளங்கிய ஓர் அரசர் இருந்தார். அவருக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் நான்காவது பிள்ளைக்கு நாபாகன் என்று பெயர்.

ஒரு சிறந்த அறிஞரிடம் கல்வி பயிலும்படி தம் புத்திரர்கள் நால்வரையும் அரசர் அனுப்பினர். நால்வருள்ளும் முதல் மூவர், சிறிதுகாலம் வரையில் முக்கியமான சில விஷயங்களைக் கற்றபின்பு தமக்குக் கல்வி போதுமென்று அவ்வளவோடு நிறுத்திப் பிறகு வயோதிகரான தங்களுடைய தகப்பனருடைய காரியங்களை ஏற்றுக் கொள்ளச் சென்றுர்கள்.

நாபாகனே கல்வியின் அருமைபெருமைகளை நன்குக அறிந்திருந்தானகையால், அதில் மிகவும் சிரத்தையெடுத்துக்கொண்டு இடைவிடாமல்

படித்துக் குருவின் மனங் கோணுமல் குறிப்பறிந்து மகிழ்வித்து வந்தான். அதனுல் ஆசாரியர் அவனிடம் மிகவும் அன்பு கொண்டு பலவித கலைகளையும் நன்கு கற்பித்தார். உரிய வயது வந்த பிறகும் அவன் வித்தை பயிலுவதை நிறுத்த வில்லை.

அக் காலத்தில் விருத்தாப்பியரான அவனுடைய தந்தை தவத்தை மேற்கொண்டு செல்ல, முதல் மூன்று பிள்ளைகளும் நாபாகன் கல்வியிலேயே கருத்துக் கொண்டு ஞானியாய்விடுவது நிச்சயம் என்று கருதித் தந்தை வைத்த பொருள்கள் அனைத்தையும் தமக்குள்ளேயே பங்கு இட்டுக் கொண்டனர். சிறிது காலம் சென்ற பின் நாபாகன் கல்வி முடித்துக் குருவினிடம் விடை பெற்றுத் திரும்பி வந்து சேர்ந்தான். வந்தவன் தன் சகோதரர்கள் சொத்துக்களைப் பங்கு பிரித்துக் கொண்டு இன்பமாகக் காலங் கழிப்பதைப் பார்த்துத் தனக்குரிய பாகம் எங்கே என்று அவர்களைக் கேட்டான். வஞ்சகர்களாகிய அவர்கள் சிறிது நேரம் தமக்குள்ளேயே கலந்து பேசிப் பிறகு நாபாகனுக்குப் பாகமாகத் தங்களுடைய பிதாவையே வைத்ததாகக் கூறினுர்கள்.

பிறகு நாபாகன் நேராகத் தன் தந்தையாரிடம் போய்த் தன் சகோதரர்கள் கூறியதை

எல்லாம் எடுத்துச் சொல்ல, அவர் கொடிய வஞ்சகர்களான அம்மூவரையும்வெறுத்து நாபாகனைப் பார்த்து, 'குழந்தாய், துக்கப்படாதே; அவர்கள் அழியும் பொருளாகிய செல்வத்தைப் பெற்றூர்கள், நீயோ எக்காரணத்தாலும் அழியாததான கல்விப் பொருளையும் நற்குணத்தையும் பெற்றிருக்கிறுய். சிறந்த முனிவர்களுக்கும் தெரியாத சிலவிஷயங்கள் உனக்குத் தெரியும். அவர்கள் அறியாத மந்திரங்களை நீ செவ்வையாக உணர்ந்திருக்கிறுய். நான் சொல்வதைக் கேள். ரிஷிகள் பலர் கூடி யாகஞ் செய்துகொண்டிருக்கின்றூர்கள். நீ அங்குப் போய் அவர்களுக்குத் தெரியாதவற்றைத் தெரிவி. அவ்வாறு நீ செய்வாயாஞல் அவர்கள் உன்னிடம் பிரீதி கொண்டு உன்னைக் கௌரவித்து யாகத்தில் மிச்சமாகும் பொருள் அனைத்தையும் உனக்குத் தருவார்கள். நீ அதைப் பெற்று வாழ்வாயாக,' என்றூர்.

தகப்பஞர் கூறியபடியே நாபாகன் சென்று ரிஷிகள் யாகம் செய்யும் இடத்தை அடைந்தான். அங்குள்ள சில ரிஷிகள் தவறுன மந்திரங்களைச் சொல்லி இடர்ப்பட்டுக்கொண்டிருந்தனர். நாபாகன் அவர்களுக்குச் சரியான மந்திரங்களை எடுத்துக்கூறிக் கிரியைகள்செய்யவேண்டிய கிரமங்களையும் எடுத்துக்காட்டி அருகில் இருந்து யாகத்தைப்

பூர்த்தி செய்வித்தான். அதனால் ரிஷிகள் அவனிடம் பரம சந்தோஷம் அடைந்து யாகம் பூர்த்தியானவுடன் அதில் மிகுந்த பல பொருள்களையும் திரட்டி அவனுக்குத் தந்தார்கள். நாபாகன் தனக்குக் கொடுக்கப்பட்டவற்றை எடுத்துக் கொண்டு தந்தையிருக்குமிடம் நோக்கிச் செல்லலானான்.

அவ்வாறு போகும் வழியில் ஒருவர் தோன்றி, 'நாபாக,யாகத்தில் மிகுந்த பொருள்கள் அனைத்தும்என்னைச்சேர்ந்தனவாகுமே; இவற்றை நீ எவ்வாறு எடுத்துக் கொள்ளலாம்?' என்று மறித்துக் கேட்டார்.

ஆனால் நாபாகன், 'ஐய, நீர் சொல்வது எனக்குத் தெரியாது. என் தந்தையார் இட்ட கட்டளைப்படி நான் இப்பொருள்களைப் பெற்றேன். எனக்கு அவருடைய வார்த்தையே பிரதானம். அவரும் நடுநிலை தவறாதவர். நாமிருவரும் அவரிடம் போவோம். உம்முடைய வழக்கை அவரிடம் சொல்லும். அவர் தீர்ப்புச் செய்கிறபடி நடக்க எனக்கு ஆக்ஷேபனை இல்லை,' என்று கூறி, அவரை உரிய மரியாதையோடு தன் தந்தையார் இருந்த இடத்துக்கு அழைத்துக் கொண்டு போனான்.

போனபின்பு அவன், வழக்கை உள்ளபடியே எடுத்துத் தன் தந்தையாரிடம் கூறி, தான் பெற்று வந்த பொருள்கள் அனைத்தையும் அவர் முன்னே வைத்தான். அவர் இருவருடைய வழக்கையும் 'எழுதரங் கேட்டு', தீர்க்காலோசனை செய்து நியாயம் ஆராய்ந்து, பின்பு, 'நாபாக, யாக காரியங்கள் பூர்த்தியான பின்பு மிகுந்துள்ள பொருள்கள் ருத்திரபகவானுக்கு உரியவை என்று நூல்கள் கூறுகின்றன. ஆகையால், இப்பெரியார் ருத்திர பகவானுல் நீ கொணர்ந்த பொருள்கள் இவருடையனவேயாம். அதில் சந்தேகமில்லை,' என்றார்.

நாபாகனைப் பரீக்ஷிக்கவேண்டுமென வந்தவர் ருத்திரபகவானே யாதலால் அவர் அவனுடைய கல்விக்கும் அவனுடைய சிறந்த தந்தையின் நடுநிலைமைக்கும் மெச்சிக் காட்சி தந்து அருள் புரிந்தார். கண்படைத்த பயனையடைந்த நாபாகன் தான் கொணர்ந்த பொருளனைத்தையும் அவர் பாதங்களில் வைத்து வணங்கினான்.

அவனுடைய அரும் செயலைக் கண்டு வியந்த ருத்திர மூர்த்தி மிகவும் மகிழ்ந்து, 'நாபாக, நீ சாலச் சிறந்த குணமும், ஐயந்திரிபறச் சாஸ்திராதிகளைக் கற்றுப் பயின்ற அறிவும், உடையவன். படித்ததற்குத் தக்க அடையாளத்தை உத்தமமான

பிதுர்ப் பக்தியினுல் வெளிக் காட்டினுய். உன் தந்தையின் வாக்கியத்தையே வேத வாக்கியமாகக் கொண்டு ஒழுகினுய். அதனுல் உனக்கு ஒரு குறைவும் வாராது; மேன்மேலும் நன்மையே பெருகும். என்னுடைய பொருளாகிய இதனை உனக்கே தந்தேன் ; பெற்றுக்கொண்டு சுகமே வாழ்ந்திரு. உன் புகழ் எந்நாளும் நிலைத்திருக்கும்,' என்று அருளிச் செய்து அந்தர்த்தான-மாயினர்.

அதன் பின்பு நாபாகன் தந்தையைப் போற்றி வாழ்ந்திருந்து தன் தமையன்மார்களை விட மேலான பதவியை அடைந்து இன்பமுற்றான். தந்தை சொல் காக்கும் தனயன் அடையும் பெருமை சாமானியமானதா ?

## 9. ஸாமுவெல் ஜான்ஸன்.

இங்கிலாந்து தேசத்தில் பதினெட்டாம் நூற்றுண்டில் ஸாமுவெல் ஜான்ஸன் என்ற பிரசித்தி பெற்ற அறிஞர் ஒருவர் இருந்தார். அக்காலத்தில் அவரை விஞ்சிய புலவர் எவருமே இல்லையெனச் சொல்லலாம். பல தேசங்களி-னின்றும் பல திறப்பட்ட மனிதர்கள் அவரை வந்து காண்பது உண்டு. பலரும் தங்களுடைய

இருப்பிடங்களுக்கு அவர் வருவதைப் பெரிய கௌரவமாகப் பாராட்டி வந்தனர். அவருடைய பெருமைக்கு அளவே இல்லை.

இப்படிப்பட்ட பெரியவர் மாதுரு பிதுரு பக்தியில் மிகவும் சிறந்து விளங்கியவர் என்பதை விளக்க அவருடைய சரித்திரத்திலிருந்து ஒரு சந்தர்ப்பத்தை எடுத்துக் காட்டுவோம்.

ஒரு சமயம் ஒரு பிரபுவின் வீட்டில் பெரிய விருந்தொன்று நடைபெற்றது. விருந்தினர் அனைவரும் மிகவும் பிரசித்தி பெற்றவர்கள். அவர்களோடு ஜான்ஸனும் முக்கியமாக அழைக்கப்பட்டிருந்தார். ஆயினும் அதிதிகள் வெகு நேரம் வரையில் காத்திருந்தும் அவர் வரவில்லை. தம்மிடையே அவர் இல்லாமல் உண்ண மனமற்ற விருந்தினர்கள் அவரைத் தேடி வரும்படி நாலா பக்கங்களிலும் ஆட்களை அனுப்பினார்கள்.

அன்று வெகு நேரமாகப் பெருத்த மழை பெய்து கொண்டிருந்தது. ஜான்ஸன் அந்நகரத்தில் சந்தை கூடுமிடத்தில் ஒரு கடையின் முன்பாகத் தலையில் ஒன்றும் போட்டுக் கொள்ளாமலும் காலில் பாதரக்ஷை இல்லாமலும் கொட்டுகின்ற மழையில் கையைக் கட்டிக்கொண்டு தலைதாழ்த்தி நின்றிருந்தார். தேவசன்னிதானத்தில் ஆழ்ந்தபக்தியோடு நின்றுவணங்குபவரைப்போல

அவர் விளங்கினர். சாமானிய ஜனங்களும், பண்டங்களை விற்கும் பெண்களும், முரட்டு வாலிபர்களும்இவ்வாறு ஒருபெரியவர் நின்றிருப்பதைக் கண்டு இகழ்ந்தார்கள். சிலர்,வாய்க்கு வந்தபடி இவரைப் பித்தனென்றும் வேறு பலவாறும் தூற்றிப் பேசினர்கள். ஆனல் புலவரோ ஒன்றும் பேசாமல் மௌனமாக வெகு நேரம் நின்று கஷ்டப்பட்ட பின்பு அவ்விடத்தை விட்டகன்று தாம் செல்ல வேண்டிய இடத்தை அடைந்தார்.

கண்ணுங் கண்ணீருமாகப் பாதரக்ஷைகளும் தலையணியும் இல்லாமல் ஜான்ஸன் வந்ததைக் கண்ட விருந்தினர், விஷயம் என்னவென்று அவரைக் கேட்க, அவர், 'நண்பர்களே! நான் செய்திருந்த ஒரு பாபத்திற்காக இன்று என்னையே தண்டித்துக் கொண்டேன். என்னுடைய புத்தி தெரிந்தது முதல் என் தகப்பனருடைய சொல்லை மீறி நடந்ததில்லை. ஆயினும் ஒரு சமயம் மட்டும் தம்முடைய புத்தகக் கடையைப் பார்த்துக் கொள்ளும்படி என் தந்தையார் எனக்கு உத்தரவு இட்டபோது விளையாட்டுப் புத்தியினல் சாக்குச் சொல்லி அதனை நிறைவேற்றுமற் போனேன். அது முதல் அக்குற்றம் என் மனத்தை வாட்டிக் கொண்டே இருந்தது. இன்று அதைப் பொறுக்க முடியாமல் நேராகச் சென்று பெரு மழையில்

பலரும் நகைக்க நின்றிருந்து திரும்பினேன். இதன் பிறகே என் மனம் ஒருவாறு திருப்தி அடைந்தது,' என்று கூறினர். இவருடைய குணம் எப்படிப் பட்டது பாருங்கள்!

---

## 10. புண்டரிகன்.

வட இந்தியாவில் பண்டரிபுரம் என்ற ஒரு சிறந்த ஸ்தலம் உண்டு. அந்த க்ஷேத்திரத்திற்கு ஆயிரக்கணக்கான ஜனங்கள் யாத்திரை செல்-வார்கள். அதற்கு முற்காலத்தில் வழங்கிய பெயர் உலோஹ தண்டம் என்பது. அதற்குச் சிறப்பு உண்டானதற்குப் புண்டரீகன் என்ற ஒரு பக்தன் காரணனுயிருந்தான். அவனுடைய சரித்திரத்தை இங்குக் கூறுவோம்.

ஒரு காலத்தில், உலோஹதண்டத்தில் ஜத்வா என்று ஒரு சிறந்த பிராமணர் இருந்தார். அவர் வேத சாஸ்திராதிகளில் நன்குபயின்ற அறிஞர். விஷ்ணு பகவானிடத்தில் அளவிறந்த பக்தி யுடையவர். தனிகராகவும் இருந்தார். அவ-ருடைய பத்தினியும் உத்தமி; எவ்விதத்திலும் அவருடைய மனம் கோணுமல் நடந்து வந்-தாள்.

ஜத்வாவும் அவர் மனைவியும் ஒழுங்காக இல்லறம் நடத்தி வரும்போது வெகு காலம்

அவர்களுக்குப் புத்திர பாக்கியம் உண்டாகவில்லை. அவர்களிருவரும் அதனால் மனம் வருந்தித் திருமாலை வணங்கிப் பிள்ளைப் பேறு கருதிப் பிரார்த்திக்க, கடைசியில் அவர்களுக்கு ஒரு அழகிய புத்திரன் தோன்றினான். பெற்றோர் அவனுக்குப் புண்டரீகன் என்று பெயரிட்டுச் சீரோடும் சிறப்போடும் வளர்த்து, உரிய பருவத்தில் வித்தியாப் பியாசமும் உபநயனமும் செய்வித்து, மணப்பருவம் வந்ததும் அழகும் நற்குடிப் பிறப்பும் உள்ள ஒரு பெண்ணைக் கலியாணமும் செய்து வைத்தார்கள்.

புண்டரீகன் கொஞ்ச காலம் வரையில் நல்ல குணத்தோடேயே நடந்து வந்தான். அவனுடைய பெற்றோர்கள் விருத்தாப்பியத்தை அடைந்தனர். அப்போது வீட்டுக்கு வந்த மருமகள் புண்டரீகனை வசப்படுத்திக்கொண்டு வயோதிகர்களை வருத்தலானாள். அவன் தன் மனைவியின் பேச்சைக் கேட்டுக் கொண்டு இருமுது குரவரையும் கவனிப்பதில்லை. வாய் உபசாரம் தானும் செய்வதில்லை. அவர்களிடத்திலிருந்துவொத்துக்களைத் தன்சுவாதீனப்படுத்திக்கொண்டு இஷ்டமானபடி செலவு செய்து அற்ப குணமுடையவனாய் விளங்கினான்.

பெரியோர்களிருவரும் அதற்காக வருத்தப் படவில்லை. தங்களுடைய போதாத காலமே

இவற்றிற்கெல்லாம் காரணம் என்றும், நல்ல காலம் வந்தால் அவன் புத்தி மாறி நல் வழியில் நடப்பான் என்றும் கருதி, அவன் செய்யும் கொடுமைகள் அனைத்தையும் பாராட்டாமல் பொறுத்து வந்தார்கள். அவனோ நாளுக்கு நாள் கொடிய குணத்தை மேற்கொள்ளுபவனாகி, இரக்கமின்றி அவர்களைத் திட்டவும் சில சமயங்களில் அடிக்கவும் ஆரம்பித்தான்.

பாபம்! பெரியோர்களிருவரும் என்ன செய்வார்கள்! இனிப் புண்டரீகன் திருந்த வழியில்லை என்றும், அவனிடமிருந்து துன்புற்று வாழ்வதை விட உயிர் துறப்பதே மேலென்றும் அவர்கள் நினைத்து அவன்மீது வெறுப்புற்றுக் காசியாத்திரை மேற்கொண்டு, சிலரோடு தள்ளாடிச் செல்லலானார்கள். அவ்யாத்திரைக்காவது வேண்டிய சௌகரியங்களைப் புண்டரீகன் செய்து தரவில்லை.

அவனும் அவனுடைய மனைவியும், 'எப்படியானால் என்ன? சனியன்கள் இரண்டும் ஒழிந்தன,' என்று மகிழ்ந்து முன்னிலும் கேவலமாக வாழலானார்கள்.

அதற்குப் பின்பு சில காலம் பொறுத்துக் காசியாத்திரை மேற்கொண்ட வேறு சிலர் உலோஹ தண்டத்தை அடைந்தார்கள். புண்டரீகன் அவர்-

களோடு பழக நேரிட்டது. அவர்கள் அவனுக்குக் காசி க்ஷேத்திரத்தின் மகிமையை எடுத்துக் கூறி அங்கு யாத்திரை போவதனுல் உண்டாகும் நன்மைகளே விளக்கினுர்கள். அதன் மேல் புண்டரீகனுக்கும் காசி யாத்திரை போக வேண்டு மென்று ஆசை உண்டாயிற்று. அவன் மனேவியும் உடன் வருவதாகச் சொல்ல, இருவரும் இரண்டு உயர்ந்த குதிரைகளின் மேல் ஏறிக்கொண்டு புறப்பட்டார்கள்.

அவர்கள் வேகமாகக் காட்டின் மார்க்கமாய்ப் போகிறபோது, நடுவழியிலே பெற்ருேரான ஜத்வாவும் அவர் மனேவியும் தள்ளாடித் தள்ளாடி ஊன்ருராகத் தங்கிக் கால் நடையாகப் பிரயாணம் செய்வதைக் கண்டார்கள். இருவரும் அவர்களேக் கண்டும் காணுதவர்களேப் போல் தாண்டிச் சென்று மேலே பிரயாணஞ் செய்து காசி நகர்ப் புறத்தை அடைந்தனர்.

அவ்விடத்தில் குக்குட முனிவர் என்ற பெரியார் ஒருவர் ஆச்சிரமம் அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தார். அப்பெரியார் 'அன்னேயும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற நல்லுரையின் உண்மையைத் தெரிந்து கொண்டு தம் பெற்ருேர்களின் மனங் கோணுமல் பணிவிடை செய்வதொன்றையே தம்முடைய கடமையாகக் கொண்டு

நடந்து வந்தார். அதனிலும் சிறந்த தவமும் புண்ணிய காரியமும் உண்டென்று அவருடைய மனத்தில் தோன்றவில்லை.

புண்டரீகன் அவ் வாச்சிரமத்தின் வெளியே இரவைக்கழிக்கலானான். அதிகாலையில் அரக்கிகள் போலக் கோர ரூபமுடைய மூன்று பெண்கள் அவ் விடம் வந்து ஆச்சிரம வாயிலை மெழுகிச் சுத்தஞ் செய்து கோலமிட்டு, உள்ளே சென்று முனிவருடைய பாதங்களை வணங்கித் தெய்வ ரூபம் பெற்று வெளியேறிப் போகலானார்கள்.

புண்டரீகன் தன் மனைவியை எழுப்பி இந்த ஆச்சரியத்தைக் காட்டிப் பின்பு அவர்களைப் பற்றி அறிய எண்ணங்கொண்டு அருகில் சென்றான். அத்தெய்வப் பெண்கள் மூவரும், 'அடே துராத்மா, அருகில் வராதே. பாபீ, எட்ட நில்' என்றனர். உடனே அவன் தரையில் நெடுகவிழுந்துவணங்கி, 'தாய்மார்களே! நான் மூடன்! என்னைக் கடைத் தேற்றுங்கள்,' என்று பிரார்த்தித்தான்.

அப்போது அத் தெய்வப் பெண்கள், 'புண்டரீகா, நீ இவ்விடத்தை அடைந்ததனாலேயே உன் பாபங்கள் எல்லாம் ஒழிந்தன. இங்குள்ள முனிவர்பிரான் பரம சாது; புண்ணிய சொரூபி. இவருக்குத் தவம் புண்ணியம் அனைத்தும் பெற்றோரைப் பராமரித்தலேயாம். அவர்களே

அவருக்குத் தெய்வம். நாங்கள் மூவரும் கங்கை, யமுனை, ஸரஸ்வதி என்ற நதிகளின் அதி தேவதைகள். பாபிகளெல்லாரும் எங்களுடைய நதிகளில் ஸ்நானம் செய்வதால் அவர்களுடைய பாபங்கள் அனைத்தும் எங்களைச் சேருகின்றன. அதனால் நாங்கள் எங்களுடைய தேவ ரூபத்தை இழந்து அரக்கிகளைப் போலக் கோர ரூபத்தை அடைகிறோம். ஆனால் இம்முனிவருக்குத் தவறாமல் பணிவிடை இயற்றி வணங்குவதனால் எங்களுடைய சகல பாபங்களும் ஒழிந்து சுயஉருவம் பெறுகிறோம்,' என்றார்கள்.

புண்டரீகன், 'அனைவருடைய பாபங்களையும் போக்கும் புனிதத் தேவிமார்களே! பெற்றோரை இகழ்ந்து கைவிட்ட கொடிய பதிதனானேன் நான்; நான் கரையேறும் மார்க்கத்தைக் கூற வேண்டும்,' என்று வேண்டினான். தெய்வ மாதர் மூவரும், 'புண்டரீகா, அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்; பெற்றோர் பிள்ளைக்குச் செய்யும் நன்றிக்கு ஈடாக உலகில் ஒருவித நன்றியும் கூற முடியாது. அப்படிப்பட்ட பெரியோர்களை இகழ்வதனால் ஒவ்வொருவனுக்கும் அதோ கதியே உண்டாகும். ஆதலால் தந்தை தாயாரைப் பூசை பண்ணிப் பாவங்களைப் போக்கிக்கொள். பகவான் உனக்கு

அருள் புரிவார்,' என்று போதித்து மறைந்து போனார்கள்.

புண்டரீகன் நற்புத்தி வரப்பெற்றவனானான். அவனுடைய மனைவியும் தன் அறியாமைக்காக வருந்தினாள். பின்பு மறுநாட்காலையில் அவர்கள் இருவரும் மகானாகிய குக்குட முனிவரைத் தரிசித்-துக் கொண்டு புறப்பட்டு, வந்த வழியே தேடிச் சென்று பெற்றோர்களிருவரையும் கண்டு பிடித்த-னர். இருவரும் பத்தி சிரத்தையுடன் அவர்களை அழைத்துப் போய்க் காசி யாத்திரை முற்றுவித்து அவர்களுடைய மனங்குளிரச் செய்தார்கள்.

பெற்றோர்கள் அவர்களுடைய தவறுகள் அனைத்தையும் மறந்து அவர்களுக்கு நற்புத்தி உண்டானதற்காக மகிழ்ந்து மனமார ஆசீர்வதித்-தனர். புண்டரீகன் அதன் பின்பு அவர்களை உலோஹ தண்டத்துக்கே அழைத்துக்கொண்டு போய் அவர்களுக்குத் தனியே ஆச்சிரமம் ஒன்றை நிருமித்து அதில் அவர்களை இருத்திப் பூசித்து வந்து உத்தம புத்திரனாக விளங்கினான்.

ஸ்ரீ மகா விஷ்ணுவும் புண்டரீகனிடத்தில் பரமப் பிரீதி உடையவரானார். ஆகவே அவர் அவனுக்குக் காட்சி தந்து அவனை ஆட்கொள்ளக் கருதி ஒரு நாள் ஆச்சிரமத்தின் முன்பாகப் பிரத்-தியக்ஷமானார். புண்டரீகன் அவருடைய தேஜ-

வைக் கண்டுபேரமானந்தம்கொண்டான். ஆயினும் அவன் அப்போது தன் பெற்ருேருக்குப் பணி-விடை செய்திருந்தாஞதலால், இரண்டு செங்கற்-களையிட்டு, 'சுவாமீ, சற்று வீற்றிருங்கள், இதோ வந்தேன்,' என்று கூறி வணங்கிப் பெற்ருேரைப் பேணிய பின்பு திரும்பினுன்.

பகவான் அவனுடைய பிதுர்ப் பக்தியை மெச்சி, 'புண்டரீகா, நீயே எமக்குச் சிறந்த பக்-தன். பெற்ருேர்க்கு நீ செய்த கைங்கரியம் எமக்-கும் செய்ததாயிற்று. உனக்கு அருள் புரியவே இங்கு வந்தோம். வேண்டும் வரம் கேள், தருகி-ரேம்,' என்ருர்.

அதற்குப் புண்டரீகன், 'எம்பெருமானே, தேவரீர் இவ்வாச்சிரமத்திலேயே எழுந்தருளி யிருந்து எந்தக் காலத்திலும் பக்தர்களுக்கு அருள் புரிய வேண்டும்,' என்று பிரார்த்திக்க, பகவான் அவ்வாறே வரம் கொடுத்தார்.

அதன் பின்பு உலோஹ தண்டத்திற்குப் பண்-டரிபுரம் என்ற பெயருண்டாயிற்று. புண்டரீகனும் நெடுங்காலம் சிறப்பாக வாழ்ந்திருந்து பின்பு முத்தி பெற்ருன்.

---

## 11. கௌசிகன்.

முன்னொரு காலத்தில் விசிட்டாபுரம் என்ற ஒரு கிராமத்தில் கௌசிகன் என்ற பிராமண வாலிபன் ஒருவன் இருந்தான். கௌசிகன் பெற்றோர்களுக்குச் செய்ய வேண்டிய கைங்கரியங்களைச் செய்வதன் பெருமையை அறியாமல், அதைக் காட்டிலும் தவமே உறுதி தரக்கூடியது என்று எண்ணி அவர்களைப் பரிதபித்து வருந்த விட்டுக் காட்டிலே போய் வசிஷ்டரிடம் உபதேசம் பெற்று அதிக காலம் தவம் செய்தான்.

இவ்வாறு பன்னிரண்டு வருஷ காலம் யோகம் செய்த பின்பு அவன் ஒரு நாள் தன் ஆச்சிரமத்தின் பக்கத்தில் உள்ள ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருக்கையில், அவன் தலையில் காய்ந்து உலர்ந்த சருகுகள் உதிர்ந்து விழுந்தன. ஆகவே அவன் உயர நிமிர்ந்து பார்த்தான். அப்போது அங்கே இரண்டு பறவைகள் சண்டையிட்டுக் கொண்டிருப்பதையும் அதனால் சருகுகள் உதிர்வதையும் கண்டு மிகுந்த கோபம் கொண்டு, கண்களினின்றும் நெருப்புப் பொறி பறக்க விழித்தான். அவ்வளவிலே அப்பறவைகள் எரிந்து சாம்பலாயின.

அதைக் கண்டவுடனே, கௌசிகனுக்கு அளவு கடந்த சந்தோஷம் உண்டாகிவிட்டது. பன்னி-

ரண்டே வருஷத்தில், முற்றும் உணர்ந்த முனி வர்களுக்கும் கிட்டாத சக்தி தனக்குச் சித்தித்து விட்டதனல் தன்னை விஞ்சிய தவசி ஒருவனு-மில்லை என்று நினைத்துப் பெரிதும் மகிழ்ந்தான்.

அப்பிராமணப் பிரமசாரி நாள்தோறும் பக்-கத்தில் உள்ள ஊர்களில் வீடு வீடாகச் சென்று பிக்ஷை வாங்கி வயிறு வளர்ப்பது வழக்கம். அவ்-வாறே அவன் அன்றும் புறப்பட்டுப்போய் அடுத்த ஊரில் உள்ள ஒரு வீட்டை அடைந்து வாயிலில் நின்று 'பவதீ, பிக்ஷாந்தேஹி,' என்று கூவினன். அப்போது உத்தமியான அந்த வீட்டுக்காரி, தன்னுடைய நாயகனுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தாள். ஆதலால் அவள், 'சற்றுப் பொறுக்க வேண்டும்; இதோ வந்தேன்,' என்ருள்.

தவசி சிறிது நேரம் காத்திருந்தும் அவள் வாராமையால் பிரமாதமான கோபங்கொண்டு தன் சக்தியைஅறியாதஅந்த ஸ்திரீயின் துணிச்சலுக்-காக அவளைப் படாதபாடு படுத்த வேண்டும் என்-பதாக எண்ணமிட்டுக் கொண்டிருந்தான். பின்பு அவ் வுத்தமி தன் கணவனுக்குரிய பணிவிடை களனைத்தையும் செய்து முடித்து விட்டுப் பிக்ஷையை எடுத்துக் கொண்டு கௌசிகனுக்கு இட வந்தாள். பிக்ஷையும் கையுமாய் வந்த அம்மாதரசியைக் கண்களில் அனல் வீச

உறுத்துப் பார்த்துக் கௌசிகன் ஹுங்காரஞ் செய்ய, அவள் 'பிள்ளாய்! உன்னுடைய சித்தி-யைப் பற்றிப் பிரமாதமாக நினைத்து மகிழ்ந்து விட வேண்டாம். உன் தீ விழியால் உடனே பஸ்ம மாகும்படியாக நான் பறவை யல்ல,' என்று அமைதியோடும் சொன்னாள்.

இதைக் கேட்டவுடனே கௌசிகன் திகைப்-பும் வியப்பும் கொண்டு, 'என்ன! காட்டிலே நான் செய்த செய்கை நாட்டிலே உள்ள இப் பெண் மணிக்கு எவ்விதம் தெரிந்தது? இம்மாதரசியின் சித்தியே சித்தி,' என்று எண்ணித் தன் அகங்காரம் எல்லாம் ஒழிந்து அவளை வணங்கி மரம் போல் நின்று விட்டான். அம்மாது பின்னும், 'தவ-சியே! உம் கோபத்தால் என்ன ஆகிவிடும் என்று நினைத்தீர்? என்னுடைய கணவனுக்குரிய கடமை-யைப் பூர்த்தி செய்துவிட்டுத்தானே வந்தேன். நான் என்ன தவறு செய்தேன்?' என்று கேட் டாள். கௌசிகன் அவள் காலில் விழுந்து, 'அம்மணி, காட்டில் நான் செய்த ஒரு செய்கையை இன்னதென்று அறிந்து என்னைக் கண்டிக்கக் கூடிய இந்தச் சக்தி தங்களுக்கு எவ்விதம் உண்டா யிற்று? அதிரகசியமான விஷயத்தையும் அறி-யும் ஆற்றல் உங்களுக்கு எவ்வளவு காலத்-

திய யோகாப்பியாசத்தால் உண்டானது? கிருபை-யோடு கூற வேண்டும்,' என்று பிரார்த்தித்தான்.

அதற்கு அக் கற்பரசி, 'அப்பா, உன்னால் சொல்லப்படுகின்ற தவத்திலேனும் யோகத்திலே-னும் நான் பழகியவளல்ல. நான் என்னுடைய நாயகரைத் தெய்வமாக நினைத்து வருகிறேன். பெண்பாலாருடைய உத்தம தருமம் அதுதானே? அவருக்குப் பணிவிடை செய்தலே நான் செய்யும் தவமும் யோகாப்பியாசமும் ஆம். ஒவ்வொரு-வருக்கும் உரிய கடமைகளை ஒழுங்காகச் செய்து முடிப்பதுதான் தவம். ஏதோ நான் பெருஞ் சித்தி அடைந்திருப்பதாகக் கூறுகின்றாயே, அச்சித்-தியும் கடமை இயற்றுதலில் தவறாத தன்மையால் பெற்றதேயாம். அதனாலேயே என்னுடைய மனக் குற்றங்கள் நீங்கப் பெற்று ஞானம் அடைந்தேன்,' என்று கூறினாள்.

பிராமணத் தவசி, 'அம்மணி, எனக்கு அப்-படிப்பட்ட ஞானம் வரவில்லையே. அதை எப்ப-டிப் பெறுவேன் ?' என்று கேட்க, அவள், 'தவ-சியே, நீ இன்னும் தகுதியடைய வில்லை. சாஸ்-திர விசாரணையும், தருமந் தவறாமையும், சிறந்த அனுபவமும், நல்லோர் கூட்டுறவும் ஆகிய இவ்-வெல்லாவற்றையும் அடையாமல் அவசரப்பட்டுச் செருக்கை உடையவனானாய். இவற்றை நீ பெற

வேண்டும். இன்னும் இதைப்பற்றி நீ அதிகம் அறிய ஆவல் கொண்டால், நேராக மிதிலாபுரிக்குப் போய்க் கடைத் தெருவில் உள்ள தரும வியாதன் என்னும் கசாப்புக் கடைக்காரனைச் சாருவாயாக. சாதியில் கொலைத் தொழில் புரியும் வேடனானாலும், அவன் தரும சாஸ்திர விற்பன்னனானதால் தரும வியாதன் என்று பெயர் பெற்றவன். அவனால் நீ எவ்வளவோ விஷயங்களை அறிந்து கொள்ளலாகும். சகல சந்தேகங்களும் நிவிர்த்தியாகும்,' என்றாள்.

கௌசிகன் அதைக் கேட்டதும் திடுக்கிட்டு, 'கசாப்புக்காரனிடமா தருமோபதேசம்! என்ன காலமிது!' என்று முதலில் மயங்கிப் பின்பு, அன்று நிகழ்ந்த அதிசயங்களால் மனந்தேர்ந்து, அறியாமல் அக் கற்பரசி தன்னை அவனிடம் அனுப்பாள் என்று துணிந்து நேராகமிதிலைக்குச் சென்று கடைத் தெருவை அடைந்து மாமிசம் விற்கும் இடத்தில் தரும வியாதனைக் கண்டான். தரும வியாதன், 'கௌசிகரே, வாரும். இந்த ஆசனத்திற் சற்று அமர்ந்திரும். உம்மை அக்கற்பரசி அனுப்பினாள் அல்லவா? சற்றிருந்தால் என் காரியங்களை முடித்துக் கொண்டு வந்து உங்களுக்கு வேண்டுவனவற்றைச் செய்கிறேன்,' என்று கூறித் தன் வேலையைக் கவனிக்கலானான்.

தன் பெயர் இன்னதென்பதும் தன்னை இன்னார் அனுப்பினாரென்பதும் யமஸ்வரூபியான இவ்வியாதனுக்கு எப்படித் தெரிந்ததென்பது கௌசிகனுக்கு ஆச்சரியத்திலும் பரம ஆச்சரியமாக இருந்தது. ஆகவே அவன் சிறிது நேரம் உட்கார்ந்திருந்து வியாதன் தன்னுடைய வேலைகளை முடித்துக்கொண்டவுடன் கூடப் புறப்பட்டுச் சென்று அவன் வீட்டை அடைந்தான். அங்கு வியாதன் தன் பெற்றோர்களிருவரையும் அழைத்துப் போய் அன்போடு நீராட்டி ஆடை உடுத்தி உணவிட்டுச் சகல சௌகரியங்களையும் செய்து பணிவிடை முடித்தவுடன் கௌசிகனிடம் வந்து, 'தவசியே! சிறியேனை ஒரு பொருட்டாக மதித்து இத்தனை தூரமும் வந்ததன் கருத்து என்னவோ? என்னால் ஆவது ஏதாவது இருப்பின் கூறவேண்டும்,' என்று அடக்க ஒடுக்கத்துடன் கூறினான்.

கௌசிகன், ஆன்ம விசாரத்தைப் பற்றியும் வேறு பல வேதாந்த விஷயங்களைப் பற்றியும் அவனைப் பல கேள்விகளைக் கேட்டுச் சந்தேகங்களையெல்லாம் நிவிர்த்தி செய்து கொண்டான். அதன் பின்பு அவன், 'தர்மவியாதரே! நீர் கொடிய தொழிலை மேற்கொண்டிருந்தும் இப்படிப்பட்ட ஞானத்தை எப்படி ஸம்பாதித்தீர் என்பது ஆச்சரியத்துக்கு இடமாயிருக்கின்றது. நீர் ஞானம்

பெற்ற விதத்தை எனக்குக் கற்பிக்க வேண்டும்,' என்று வேண்டிக் கொண்டான்.

அதன்மேல் தரும வியாதன், ஐயா ! நான் அபாரமான தவமாவது யோகமாவது செய்ய வில்லை. தாய் தந்தையர்களையன்றி வேறு தெய்வ- மும் அறியேன். உலகிலுள்ள எல்லாத் தருமங்- களிலும் சிறந்தது பிதுர்ப் பக்தியே என்பது என் உறுதியானகொள்கை. மாதுருபிதுருகைங்கரியமே தவம். ஒவ்வொருவருக்கும் உரிய கடமைகளைப் பிச- காமற் செய்வதே தவம். இதில் நான் தவருதிருப்- பதனுல் தான் எனக்கு ஏதோ கொஞ்சம் ஞானம் உண்டாயிருக்கின்றது. உம்மை அனுப்பிய அவ்வுத்- தமக் கற்பரசியும் பர்த்தாவின் பணிவிடையாகிய தருமத்தில் தலைநின்றவள்; ஆதலால்தான் அவ்- வளவு அற்புத ஞானம் வாய்ந்திருக்கிருள்.—இனி, உமக்கும் தாய் தந்தையர்கள் இருக்கிருர்களல்லவா? தள்ளாதகாலத்தில் அவர்களை அன்போடு ஆதரிக்க வேண்டியது உம் கடமை அல்லவா ? சர்வ சங்க பரித்தியாகம் செய்த பெரியோர்களும் பெற்ருேர்க் குரிய கடமைகளைச் செய்ய வேண்டிய ஆவசிய கத்தை நூல்கள் முறையிடுகின்றன. அப்படி- யிருக்க, நீர் அவர்களைக் கைவிட்டுத் தவமே பெரிது என்று எண்ணி வந்தீர். அவர்களுடைய மன- மார்ந்த ஆசீர்வாதத்தை நீர் பெறவில்லை. உமக்கு

எவ்வாறு ஞானம் உதயமாகும்? ஆகையால் நீர் இப்போது உடனே போய் அவர்களை அன்போடு ஆதரித்துக் காப்பாற்றும். அதுவே சிறந்த தவமும் புண்ணியமும் தருமமும் ஆம். அதைத் தவருது செய்தால் உமக்கு ஞானம் தானே வரும்,' என்ருன்.

கௌசிகன், தர்ம வியாதனுல் உபதேசிக்கப்பட்ட வியாத கீதையின் உண்மைகளைச் சிந்தித்தும் பிதுர்ப் பக்தியின் சிறப்பை ஐயமற உணர்ந்தும், நாணி, அவனிடம் விடை பெற்றுக் கொண்டு தாய் தந்தையரை ரக்ஷிக்கச் சென்ருன். அதனுல் அவன் விரைவில் மேன்மையுற்று எல்லா நன்மைகளையும் அடைந்தான்.

---

## 12. குவின்டஸ் ஸிஸிரோவின் குமாரன்.

சுமார் 1800-வருஷங்களுக்கு முன்பு இட்டலி தேசத்தைக் கொடிய வேந்தர் மூவர் கூடி அரசாட்சி புரிந்து வந்தார்கள். அவர்கள் வெகு ஜன விரோதிகள். ஜன சமூகத்தின் நன்மைக்காக உழைத்தவர்கள் அனைவரையும் அவர்கள் கொன்று தம் இஷ்டப்படி நடக்கலானுர்கள்.

இவ்வாறு இவர்களுடைய கொடுமைக்கு ஆளானவர்களில் ஸிஸிரோ சகோதரர்கள் இருவர். இவர்களுள் மூத்தவர் பெயர் டல்லியஸ்

ஸிஸிரோ; இளையவர் பெயர் குவின்டஸ் ஸிஸிரோ. இவ்விருவரையும் சிரச்சேதம் செய்து விடும்படி வேந்தர்களுடைய கட்டளை பிறந்தது. ஆகவே அவர்கள் உயிர்தப்பிப் பிழைத்தோடி ஓர் இரகசிய-மான இடத்தை அடைந்த பின்பு, மூத்தவர் கடற்-கரைக்குச் சென்று கப்பல் ஏற்பாடு செய்வதென்-றும், இளையவர் ஒருவரும் அறியாதபடி வீடு சென்று செலவுக்குப் பணம் கொண்டு வருவதென்-றும் ஏற்பாடு செய்து கொண்டனர். குவின்டஸ் அவ் வேற்பாட்டின்படி இரகசியமாக வீடு திரும்-பினர்.

இச்செய்தி எவ்விதமாகவோ மூவேந்தர்களு-டைய செவிக்கு எட்டியது. ஆகவே அவர்கள் சிறிதும் இரக்கம் பாராட்டாமல் சில கொலையா-ளர்களை ஏவி அவரைக் கண்டுபிடித்துக் கொன்று விடும்படி கட்டளை இட்டனர். கொலைஞர் வருவது குவின்டஸ் ஸிஸிரோவின் இளங்குமாரனுக்குத் தெரிந்தது; உடனே அவன் அதைத் தந்தைக்குத் தெரிவிக்க, அவர் அவனுக்கு மட்டும் தெரிந்ததும் பிறரால் எளிதிற் கண்டு பிடிக்கக் கூடாததுமான ஒரு பத்திரமான இடத்தில் ஒளிந்து கொண்டார்.

வந்த கொலையாளிகள் வெகு நேரமாகத் தேடி-யும் அவரைக் காண முடியாமற் போனதால் கடுங்-கோபங் கொண்டு குவின்டஸின் மகனைப் பற்றிக்-

கொண்டு தந்தை ஒளிந்து கொண்டிருந்த இடத்தைக் காட்டாவிட்டால் கொன்று விடுவதாக அச்சுறுத்தினுர்கள். அக்குமாரன் அவர்களுடைய மருட்டல்களுக்குச் சிறிதும் பயப்படவில்லை; தந்தையைக்காட்டிக் கொடுத்துத் துரோகியாவதைக் காட்டிலும் தன் ஆருயிரை இழப்பது மேலானது என்று கருதி அவன் ஒன்றும் சொல்லாமல் இருப்பானுன். அவர்கள் அவனை மேலும் மேலும் வற்புறுத்த அச்சிறுவன் தந்தைக்குப் பதிலாகத் தன்னையே கொல்லும்படி கூறினுன்.

அவனைக் கொல்வதனுல் ஏதும் பயனில்லை என்றறிந்த கொலையாளர் சித்திர வதை செய்தாகிலும் அவனிட மிருந்து உண்மையை வருவிக்க வேண்டுமென்று நினைத்தார்கள். அதனுல் அருங்குமரனுடைய உடலில் பல விடங்களும் தீயினுற் பொசுக்கப் பட்டன. ஆயினும் ஒரு சொல்லும் வெளிவரவில்லை. அதனுல் ஆக்கிரகம் கொண்டு அப்பாவிகள் கத்திகொண்டு அவன் உடலிலிருந்து சிறிது சிறிதாகச் சதையைக் கிழித்து உண்மையைக் கூறும்படி நிர்ப்பந்தித்தனர். அவ்வளவு மரணுவஸ்தையையும் அனுபவித்தும் அவ்வீரச் சிறுவன் தன் தந்தையைக் காட்டிக் கொடுக்கவில்லை.

கடைசியில் தம் அருங்குமரன் இவ்வாறு கஷ்டப்படுவதை அறிந்த குவிண்டஸ் ஸிஸிரோ,

அதைச் சகிக்கப் பொருமல் தம் உயிரையும் பொருட்படுத்தாமல் மறைவிடத்தை விட்டு வெளி வந்து தன்மகனைச் சித்திரவதை செய்யாமல் விட்டுத் தம்முயிரைக் கொள்ளும்படி கூறினர். அவ்வருமந்த புதல்வனே, தன்னைக் கொன்ருகிலும் அவரைக் காப்பாற்றும்படி மன்ருடினன். ஆனல் கொடியர்கள் அவர்களிருவரையும் பிடித்து இரக்கமின்றி ஒரே சமயத்தில் வாளால் வெட்டித் தள்ளினர்கள். தந்தையும் மகனும் ஒருவர்பால் ஒருவர் வைத்திருந்த அன்புக்கு இதைக் காட்டிலும் சீரிய உதாரணம் உண்டோ?

13545
600 008.

The B. N. Press, Mount Road, Madras.